Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல் & மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 18 (11.01.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:102

# போர்நிறுத்த நடைமுறைகள் எந்த மாற்றமுமின்றி தொடரும்!

## சர்வதேச கண்காணிப்புக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

**சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் முழுமையாக நடைமுறையில் இருப்பதாக போர்நிறுத்த கண்காணிப்புக்குழு நேற்று அறிவித்தது.**

கடந்த 2001 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் நடைமுறையிலோ அல்லது போர்நிறுத்தக் கண்காணிப்பு நடைமுறையிலோ எந்த மாற்றமும் இல்லையெனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.

தென்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருக்கின்றபோதும் புலிகளுடனான போர்நிறுத்தத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் தொடர்ந்தும் ஈடுபட்டிருக்கின்றனர் எனவும் கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுக்களை ஐக்கிய தேசிய முன்னணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மாநாடு நடத்துவார் அகாஷி!

## ஆயினும் பயனில்லை என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

கொழும்பு வரவுள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி, சமாதான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மாநாடு ஒன்றை நடத்தவுள்ளார். ஆனாலும் அந்த மாநாடு நாட்டுக்கு சாதகமாக அமையமாட்டாது என்று நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜப்பானிய விசேட தூதுவரான யசுஷி அகாஷி இந்த மாதம் 19 ஆம் திகதி கொழும்பு வருகிறார். இவர் 23ஆம் திகதி சமாதான நடவடிக்கைகள் தொடர்பான மாநாடொன்றையும் நடத்தவுள்ளார். ஆனால் இந்த மாநாட்டின் மூலம் நாட்டிற்கு சாதகமான முடிவுகள் எதுவும் கிட்டுமென எதிர்பார்க்க முடியாது.

கடந்த செப்ரெம்பர் மாதம் கொழும்பு வந்த அகாஷி, ரோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதி முழுமையாக கிடைக்குமென உறுதியளித்தார்.

உறுதியளிக்கப்பட்ட இந்த நிதியுதவிகளை வைத்தே நிதியமைச்சரினால் வரவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் – முஸ்லிம்கள் அம்பாறையில் சந்திப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் அக்கரைப்பற்று மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை பத்து மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை; நினைவுநாள் நேற்று அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழாராய்ச்சி மாநாட்டின்போது இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஒன்பது அப்பாவித் தமிழர்களை நினைவு கூரும் 30 ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக நடைபெற்ற, படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அப்பாவித்தமிழர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில், கொல்லப்பட்ட மக்கள் நினைவாக நினைவுச்சுடரினை மாவீரர் நிரஞ்சனின் தந்தையார் மற்றும் யாழ்.மாவட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் 13 ஆம் திகதி கொழும்பு வருகிறார்!

(கொழும்பு)

ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் செல்வி கோஸ்ரின் முல்லர் நாளைமறுதினம் கொழும்பு வரவுள்ளதாக கொழும்பிலுள்ள அந்நாட்டுத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட வைபவத்தில் கலந்துகொள்வதற்காகவே இவர் கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு வரும் கோஸ்ரின் முல்லர் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

# மாகாணசபைகள் 26 இல் கலைப்பு; தேர்தல்கள் மே மாதம் நடைபெறும்!

(கொழும்பு)

இந்த மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் மாகாணசபைகள் கலைக்கப்படலாமென நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கலைக்கப்படும் மாகாணசபைகளில் - மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென்மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணம் ஆகிய ஆறு மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை எதிர்வரும் மே மாதத்திற்கு முன் ஒரே நாளில் நடத்த அவர் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் பின்னரே ஜனாதிபதியால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரே நாளில் தேர்தலை நடத்துவது தொடர்பான யோசனையை நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழர்கள் நான்கு பேர் தமிழக பொலிஸாரால் கைது!

(சென்னை)

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இராமேஸ்வரம் சென்ற நான்கு இலங்கைத் தமிழர்கள் தமிழக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த செபஸ்ரியன், அவரது மனைவி ஜெனினா குரு, மகன் அருண்ராஜ், மகள் லாரன்ஸியா ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

மீனவர் ஒருவரிடம் 2500 ரூபா பணம் கொடுத்து படகுமூலம் இவர்கள் இராமேஸ்வரம் சென்றுள்ளனர். இவர்களை அழைத்துச் சென்ற மீனவர் இராமேஸ்வரம் அருகிலுள்ள ஒரு தீவில் இவர்களை இறக்கிவிட்டுச் சென்றுள்ளார். தீவில் தத்தளித்துக்கொண்டிருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் 18 பேர் கடற்படையிடம் ஒப்படைப்பு!

(சென்னை)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தபோது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட தமிழக மீனவர்களில் 18 பேர் நேற்று இந்தியக் கடற்படையினரிடம் இலங்கைக் கடற்படையினரால் கையளிக்கப்பட்டனர்.

சட்டமா அதிபரின் உத்தரவுக்கு அமைய ஊர்காவற்துறை நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு சாவகச்சேரி – கல்வயலில் இளைஞன் பலி!

## சடலம் அடையாளம் காணப்படவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கல்வயல் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கல்வயல் துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள ஐயனார் கோயில் பகுதியில் சிறிய ஒழுங்கை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், தலையில் சுடப்பட்டதாலேயே மேற்படி இளைஞன் இறந்ததாகத் தெரியவருகிறது.

ரொயோட்டா வான் ஒன்றில் கொண்டு வரப்பட்டே இந்த இளைஞன் சுடப்பட்டதாகக் கூறப்பட்டபோதிலும், இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து நேற்று நண்பகல் சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் கொல்லப்பட்ட இளைஞரின் சடலத்தை மீட்டு, பிற்பகல் 4 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி-2009)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# கடற்படையினரின் நடவடிக்கையை கண்டித்து புதுக்கோட்டை மீனவர்களும் வேலை நிறுத்தம்!

இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகளைக் கண்டித்து புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் நேற்று முதல் 5 நாட்களுக்கு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

கச்சதீவு அருகே மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் தாக்குதல் நடத்திவருகின்றனர். மீனவர்களை அடிக்கடி கைதுசெய்து செல்வதும், மீன்பிடி வலைகள், படகுகளை சேதப்படுத்துவதும் அதிகரித்துவருகின்றன.

அத்துடன், கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்ட ஏராளமான தமிழக மீனவர்கள், தொடர்ந்து இலங்கை சிறைகளில் வாடிவருகின்றனர். எனவே, அவர்களை விடுவிக்கக்கோரியும், இலங்கை கடற்படையின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் ராமேஸ்வரம் மீனவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

இந்த நிலையில் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களும், நேற்றுமுன்தினம் முதல் 5 நாட்களுக்கு வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்திவருகின்றனர். ஜெகதாப்பட்டணம், கோட்டைப் பட்டணம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் புதுக்கோட்டை மாவட்ட மீன் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

## புதிய நிர்வாகக் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைகழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்திற்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புதிய நிர்வாகத் தெரிவின்படி தலைவராக ஜி.சத்தியகுமார், செயலாளராக கே.கந்தசாமி, பொருளாளராக ரி. பிறேம்குமார், ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். (ப)

## பகுதித் தலைவர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர வகுப்புக்களின் பகுதித் தலைவர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் தரம் 12, 13 வகுப்புகளில் பாடசாலை மட்டக் கணிப்பீடு வேலைத்திட்டம் தொடர்பாக பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளினால் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பான சுற்று நிருபம் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (122)

# பஸ் – சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் படுகாயம்

யாழ். ஓட்டுமடம் சந்தியில் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ், சைக்கிளில் சென்ற சிறுவனை மோதியதில் சிறுவன் படுகாயமடைந்தான்.

காரைநகர் டிப்போவில் இருந்து வந்த பஸ் வண்டியே, நேற்றுக் காலை 7.30. மணியளவில் சிறுவனை மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டுமடத் தடியைச் சேர்ந்த ஜெயசிங்கம் அன்ரன் றோசான் (வயது-12) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மாணவன் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சிறுவன் பயணித்த சைக்கிள் பஸ்ஸின் முன் சில்லில் சிக்கியதில் முற்றாகச் சேதமடைந்துள்ளது. சிறுவன் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ப.121)

# வீதி ஒழுங்கை மீறியவரின் உழவு இயந்திரம் பறிப்பு!

## யாழ் நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதிப் பகுதியில் போக்குவரத்து விதியை மீறிப் பயணித்த உழவு இயந்திரம் யாழ். போக்குவரத்துப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சனநெரிசல் மிக்க இப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை மீறிச் செலுத்தப்பட்டதுடன், உழவு இயந்திரத்தின் இரு மட்காட்டிலும் இருவர் பயணித்துள்ளனர்.

இதனை அவதானித்த யாழ். போக்குவரத்து பொலிஸார் அவர்களை மறித்து, வாகன அனுமதிப் பதத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் முதலானவையைப பரிசீலித்தபோது, எதுவுமே அவர்களிடம் இருக்கவில்லை.

உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், பெட்டி பொருத்தப்படாத உழவு இயந்திரத்தில் மூவர் பயணித்தமை, எந்தவித அனுமதிப் பத்திரம் வைத்திருக்கப்படாமை, முதலான குற்றத்திற்காகவே உழவு இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக யாழ். பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்தனர்.

இத்தகைய பயணத்தினைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொது மக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வீட்டுத் திட்டத்திலிருந்து 130 வீடுகள் விற்பனை

(நாவற்குழி)

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 298 வீடுகளில் 130 வீடுகள் அரச அதிபர் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள வீடுகளில் தினமும் திருட்டு போன்ற பிரச்சினைகள் இடம்பெறுகின்றதாகவும், அந்த வீட்டுத் திட்டத்துடன் தொடர்பில்லாதவர்கள் அப்பகுதிக்கு செல்லவேண்டாம் என தென்மராட்சி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

இந்த 130 வீடுகளும் வழங்கப்பட்ட பின்னர் களவு மற்றும் பல பிரச்சினைகள் இடம்பெறுவதனால் சம்மந்தப்படாதவர்கள் அந்தப்பகுதிக்கு அனுமதியின்றி செல்லவேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (25)

# சைவ பரிபாலனசபையின் பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இவ் வருடம் பண்ணிசைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, என்ற மூன்று பிரிவுகளில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள், வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பண்ணிசைப் போட்டிகள் தொடர்பான விபரங்களை யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும், பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டதாரிகள்சங்க அலுவலகம் இடமாற்றம்.

யாழ்.மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் சங்க அலுவலகம் நேற்று முதல் இல.36, வைமன் றோட் நல்லூர் எனும் முகவரிக்கு நிரந்தரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அலுவலகம் ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 12.30 மணிவரையும் திறந்திருக்கும் என சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எரிக் கணேஷ்
பல்மூக்குக் கண்ணாடி அகம்
566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
சங்குப் பற்களைக் கட்டுவதற்கும், நவீன முறையில் கிளிப் போடுவதற்கும், இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும், விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக்கொள்ளவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடிக் கூடுகள் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப் பற்கள் சுத்தம் செய்யும் மாத்திரைகள் பெற்றுக்கொள்ளலாம்.
எரிக் கணேஷ்
(சி/2093)

ராஜா யாழ்ப்பாணம்.
ராஜ்கிரன், ஸ்ரீ, கருணாஸ் நடித்த
கொஞ்சிப் பேசலாம்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்)
(சி-2005)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
குஷி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)



புன்னாலைக்கட்டுவன் புனித இராயப்பர் தேவாலயத்தில் ஒளிவிழா நடைபெற்றபோது, அருட்தந்தை அன்ரனிபாலா அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும், அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் இன்பன் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (42)



சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் நடத்தப்பட்ட மணிவாசகர் விழாவில் தமிழர் பேரூர் ஆதின முதல்வர் தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்கு வருகைதந்தவரை சந்நிதியான் ஆசிரம இயக்குநர் எஸ்.மோகனதாஸ் சுவாமிகள் பொன்னாடை போர்த்தி வரவேற்பதையும், அருகில் நல்லை ஆதின முதல்வர் சோமசுந்தர பரமானந்த சுவாமிகளையும் காணலாம்.

# நெடுந்தீவு விளையாட்டு மைதானத்திற்கு இருபது பரப்பு காணி அன்பளிப்பு

நெடுந்தீவுப் பிரதேசத்துக்கான பொதுவிளையாட்டு மைதானத்திற்கென 20 பரப்புக்காணியினை நெடுந்தீவின் முன்னாள் கிராம சேவையாளர் நா.கணபதிப்பிள்ளை நெடுந்தீவுப் பிரதேசசபைக்கு நன்கொடையாக வழங்கியிருந்தார்.

நெடுந்தீவுக்கு என ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாமையாலும், தீவக விளையாட்டு வீரர்களின் திறனை அதிகரிப்பதுடன் பல வீர, வீராங்கனைகளை எதிர்காலத்தில் உருவாக்கவேண்டும் என்ற நோக்குடனும் இக்காணியினை நன்கொடையாக அவர் வழங்கியுள்ளார்.

நன்கொடையாளியின் தாய் தந்தையான நாகேந்திரன் செல்லம்மா இருவரதும் நினைவாகவே இக்காணி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (113)

# மீளப் பெறப்படாத அடகு நகைகளை மக்கள் வங்கி விற்க தீர்மானித்துள்ளது

மக்கள் வங்கிக்கிளைகளில் அடைவு வைக்கப்பட்டு மீளப் பெறப்படாத நகைகளை வங்கி ஏலத்தில் விற்கத் தீர்மானித்துள்ளதாக மக்கள் வங்கியின் வடவலய நிறைவேற்று அதிகாரி சி. இளம்பிறைநாதன் தெரிவித்தார். 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்கள் வங்கிக் கிளைகளில் அடைவு வைக்கப்பட்ட நகைகளே இவ்வாறு ஏலத்தில் விற்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடகு வைத்த நகைகள் மீளப் பெறுவது தொடர்பாக ஊடகங்களில் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும், சில அடகுவைத்தவர்கள் அடகு மீளப் பெறும் சந்தர்ப்பம் அளிக்கவில்லையென கூறிவருகின்றனர்

அடகு வைத்தவர்கள் அடகுத் தொகையையும், வட்டியையும் செலுத்தி நகைகளை மீளப்பெற முடியும். ஏலத்தில் விற்கப்படும் பொழுது இச்சலுகை செல்லுபடியற்றதாகிறது. தற்போதைய பவுண் விலையை நோக்கும்பொழுது, அடகு மீட்பது வாடிக்கையாளர்களுக்கு இலாபமானதே. எனவே, உரியவர்கள் அந்தந்த கிளை முகாமையாளர்களை தொடர்பு கொள்ளமுடியும்.

இவ்வாறு மக்கள் வங்கியின் வடவலய நிறைவேற்று அதிகாரி சி.இளம்பிறைநாதன் தெரிவித்தார்.

## விதவைப் பெண்களுக்கு சேவாலங்கா உதவும்

தென்மராட்சி அல்லாரை கிராம சேவகர் பிரிவில் உள்ள விதவைப் பெண்களின் நலனை அபிவிருத்தி செய்யும் நோக்கை மையமாகக் கொண்டு சேவாலங்கா நிறுவனம் பல்வேறு வகையான திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்தத் திட்டம் மூன்று வருடங்களாக மேற்கொள்ளப்படும். இது ஜனவரி 2004 முதல் ஆரம்பிக்கப்பட்டு 2006 டிசம்பருடன் பூர்த்தியடையும் என அல்லாரை கிராம சேவகர் ரி. மகாலிங்கம் தெரிவித்தார். (25)

தேவை
சுன்னாகத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவுள்ள 35 - 40 வயதுடைய பெண் லிகிதர் தேவை, சுன்னாக பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
முகாமையாளர்,
91, K.K.S வீதி,
கொக்குவில்.
(சி/2094)

விற்பனைக்கு
உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TELESONIC, RIKON, PACIFIC, USHA AND SUNDA வகையில் Fans, Toasters, Irons, Gas Cookers, Washing Machines, Food Jars, Blenders, Clocks, Rice Cookers, Televisions, Ceiling Fans, Mega Vacuum flasks இன்னும் பலதரப்பட்ட உபகரணங்களும் உண்டு.
IZZY ENTERPRISES
164/1, Prince Street, Colombo - 11
T.P:- 2437843 Fax:- 075-354304
(சி-2023)

# உடன்படிக்கையிலிருந்து விலகுவதாக

# அரசாங்கம் எமக்குத் தெரிவிக்கவில்லை

## நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்த விலகிக்கொள்ளப் போவதாக அரசாங்கத் தரப்பிலிருந்து, தமக்கு உத்தியோகபூர்வ முன்னறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை என இலங்கைக்கான நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக வெளியான செய்திகள் குறிததுக் கருத்து வெளியிடும்போதே, நோர்வேத் தூதரக அதிகாரி இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து நோர்வே அரசாங்கத்துக்கும் அறிவித்தல் எதுவும் விடுக்கப்படவில்லை எனவும் நோர்வேத் தூதரக அதிகாரி தோமஸ் ஸ்ரங்லன்ட் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதானால், அதுகுறித்து 14 நாட்களுக்கு முன்னதாக எழுத்து மூலமாக நோர்வே அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட வேண்டியது அவசியம் என்று அவர் தெரிவித்தார். இத்தகைய உத்தியோகபூர்வ அறிவித்தலெதுவும் கிடைக்கப் பெறாதநிலையில், அதுகுறித்து தம்மால் கருத்தெதுவும் வெளியிட முடியாது என்றும் -

இதேவேளை, அரச தரப்பிலிருந்து உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில், இதுகுறித்து கருத்தெதுவும் தெரிவிக்க முடியாது என விடுதலைப் புலிகளின் வட்டாரங்களும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சப்புகஸ்கந்த இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் கற்கை நெறிகளை நிறைவு செய்த அதிகாரிகளுக்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க பட்டச் சான்றிதழ் வழங்குகின்றார். அருகில் பயிற்சிக் கல்லூரிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிர ஜேசூரிய.

# 33 சிரேஷ்ட படையதிகாரிகள் பட்டம் பெற்று வெளியேறினர்

(கொழும்பு)

சப்புகஸ்கந்த இராணுவ கட்டளைபீடம் மற்றும் அதிகாரிகள் கல்லூரியில் பயிற்சிப் பாடநெறியினை மேற்கொண்டு, பட்டம்பெற்று வெளியேறும் ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் அணிகளைச் சேர்ந்த 33 சிரேஷ்ட அதிகாரிக்களுக்கான பட்டமளிப்பு வைபவம் - பண்டாரநாயக்க ஞாபகார்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் முப்படைத்தளபதிகளுடன் களனிப் பல்கலைக்கழக துணைவேந்தரும் கலந்துகொண்டார்.

1998 இல் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் கல்லூரியானது, பாதுகாப்பு தொடர்பான கற்கைநெறிகளில் முதுமாணிப்பட்டத்திற்கான மேற்படிப்பொன்றை களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்குத் தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பான பாடநெறிகளைக் கற்பிப்பதன்மூலம் அவர்களைச் சிரேஷ்ட உயர்பதவிகளில் நியமனம்பெற தகுதியானவர்களாக உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இராணுவத்தை சேர்ந்த 26 மேஜர்கள், மூன்று கடற்படை அதிகாரிகள், மூன்று விமானப்படை அதிகாரிகள், ஒரு பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இந்த விழாவில் தமது பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

### பண்ணிசைப் போட்டி

புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை 2004 ஆம் ஆண்டில் பண்ணிசைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, என்ற மூன்று பிரிவுகளில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள்- வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பண்ணிசைப் போட்டிகள் தொடர்பான விபரங்களை, யாழ்ப்பாணம்-நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபையுடன் தொடர்புகொண்டு பெறறுக்கொள்ளலாம் எனவும், பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளில் தொழில்புரிவோருக்கு ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு, இலங்கையில் ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அமுல்படுத்தப் போவதாகத் தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

வெளிநாடுகளில் சுமார் 10 இலட்சம் இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். இவர்கள் ஏதாவது காரணத்தினால் விலகி, நாட்டுக்கு திரும்பும்போது, அவர்களுக்கு எந்த விதமான கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக இவர்களின் எதிர்காலம் பாதிப்படைகின்றது.

எனவே, இவற்றை நிவர்த்தி செயயும் பொருட்டு இந்தப் புதிய திட்டத்தினை அரசாங்கம் அறிமுகப் படுத்தவுள்ளது.

# இலங்கைத் தமிழர்களின் அரசியல்நிலை குறித்து தமிழக அரசியற்கட்சித் தலைவர்களுக்கு விளக்கம்

## அமைச்சர் மகேஸ்வரன் கூறுகிறார்

இலங்கைத் தமிழர்களின் தற்போதைய அரசியல்நிலை குறித்து, தமிழக அரசியற்கட்சித் தலைவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். தமிழக பத்திரிகையாளர்களை இங்கு அழைத்து வந்து உண்மை நிலையை புரிய வைக்கப்போவதாகவும் -

வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான தனிநபர் பிரேரணைமீது உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என, அமெரிக்க தூதுவரிடம் நான் கோரிக்கை விடுத்ததற்கு சில சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனவாத சாயம் பூசியிருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் கூறுவது இதுதான். ஐக்கிய தேசிய கட்சி தனியே சிங்கள கட்சி அல்ல. அது சகல சமூகங்களையும் உள்ளடக்கியது. நான் அமைச்சராக இருந்தாலும் எனது இனத்திற்காக குரல் கொடுப்பேன். என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்குத் தமிழகம் தயாராகி வருகின்றது. தமிழர்களின் தற்போதைய யதார்த்த நிலையை தமிழக அரசியற்கட்சிகளுக்கு விளககிக் கூறவுள்ளேன்.

தமிழக பத்திரிகையாளர்களை இங்கு அழைத்து உண்மை நிலைமையை தெளிவுபடுத்தவுள்ளேன். பெப்ரவரி மாதம் அவர்கள் அழைத்து வரப்படவுள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு நாட்டுக்கு திரும்புவோருக்கு ஓய்வூதியம் வழங்குவது நல்லது. தமிழ் மக்களில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றார்கள்.

அவர்கள் ஓய்வூதிய திணைக்களத்துடன் தொடர்புகொண்டு, பணத்தை அனுப்புவார்களேயானால், அவர்கள் நாடு திரும்பியதும் ஓய்வூதியத்தை பெறமுடியும். இதற்கான ஏற்பாடுகளை ஓய்வூதிய திணைக்களம் செய்யவேண்டும்.

வெளிநாடுகளில் பணிபுரிந்துவிட்டு, நாடு திரும்புவோருக்கான ஓய்வூதியத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது, நான் மேற்கூறிய விடயமும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரயில் சேவையைப் புனரமைக்க இந்திய நிறுவனத்துடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

ரயில்சேவையை அபிவிருத்திசெய்வதற்கு, இந்தியாவின் ரைட்ஸ் நிறுவனத்துடன் ரயில்வே அதிகாரசபை ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும வாரம்முதல் ரைட்ஸ் நிறுவனம் தனது நடவடிக்கைகளில் ஈடுபடும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 60 ரயில் பெட்டிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட இருக்கின்றன.

இதனைவிட, ரைட்ஸ் நிறுவனம இலங்கையின் ரயில் பாதைகளைப் புனரமைக்கும் பணிகளில் ஈடுபடவுள்ளது. அதேநேரம் 12 ரயில்போக்குவரத்துப் பாலங்களைப் புனரமைப்பதற்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது.

களனிப்பாலத்தினூடாக மாற்று மார்க்கம் ஒன்று விரைவில் அமைக்கப்படலாம் என்று புகையிரத அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இனிவரும் காலங்களில் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் - ரைட்ஸ் நிறுவனத்தின் ஊடாகவே புதிய ரயில் எஞ்சின் கொள்வனவு உட்பட்ட அனைத்து கொள்வனவுகளும் இடம்பெறவேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

(01)

# சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாடு திறைசேரியுடன் பேச்சுக்கள் நடத்தமுடிவு

## அரசாங்கம் காலத்தை இழுத்தடிப்பதாக குற்றச்சாட்டு

சுகாதார ஊழிகர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக நாளை திறைசேரியுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு ஒருவார காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுபெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைப்பின் செயலாளர் நிஹால் ஜயதிலக தெரிவித்தார்.

சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீவுகாணக்கோரி சுகாதார ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு முன்னால் மறியற்போராட்டங்கள் நடத்தப்பட்டன. தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் சுகாதார அமைச்சுவரை ஊர்வலம் ஒன்றையும் சுகாதார ஊழியர் நடத்தியிருந்தனர்.

இதன்போதே சுகாதார அமைச்சின் செயலாளர் மேற்குறித்த வகையில் தெரிவித்தார்.

இதேவேளை - அரசாங்கம் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கால இழுத்தடிப்பையே செய்கின்றது. தீர்க்கமான முடிவு எட்டப்படுமானால் மட்டுமே, நாம் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வோம். எவ்வாறெனினும் திறைசேரியுடனான பேச்சுவார்த்தைக்கு எமக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தையில் எமது நிலைப்பாட்டை வலியுறுத்துவோம் காலநீடிப்பை எமது சங்கம் இனியும் அனுமதிக்காது. இப்பேச்சுவார்த்தை எமது இறுதிப் பேச்சுவார்த்தையாகவும் அமையலாம்.

இவ்வாறாக சுகாதாரத்துறை தொழிற்சங்கக் கட்டமைப்பின் இணைப்புச் செயலாளர் ரவி குருதேன் கருத்துவெளியிட்டமை குறிப்படத்தக்கது.

# களுத்துறையில் கொள்ளைச் சம்பவம் கடற்படையிலிருந்து விலகியவர் கைது !

களுத்துறைப்பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த கொள்ளைச்சம்பவம் ஒன்றில், கடற்படையிலிருந்து தப்பிவந்த ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர் குறிப்பிட்ட ஒரு நகைக்கடைக்குச் சென்று நகைகளை கொள்ளை அடித்ததன் பின், அந்த நகைகளை மோட்டார் சைக்கிள் ஒன்றில் கொண்டு சென்ற நேரம் பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

இந்த மோட்டார் சைக்கிள் போலியான இலக்கத்தகட்டினைக் கொண்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து இவரை விசாரித்தபோது கடற்படையிடம் இருந்து தப்பி வந்ததாக அவர் தெரிவித்துள்ளார். இவரிடமிருந்து பிஸ்டல் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

(01)

# ஜே.வி.பி யின் கருத்துக்கு பலத்த கண்டனங்கள் !

போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து, பிரதமர் விலகுவதானால், அவர் தனது பிரதமர் பதவியிலிருந்தும் விலக வேண்டும் என்ற ஜே.வி.பியின் கருத்துக்கு, பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஜே.வி.பி.யின் இந்தக் கருத்து சிறுபிள்ளைத்தனமானது என, விவசாய தொழில்நுட்ப பயிர்ச் செய்கைச் செயற்திறன் அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்த கருத்து தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே, அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் இத்தகைய செயற்பாடுகளால், சமாதான முயற்சிகள் தடைப்பட்டு, நிறுத்தப்பட்டுவிடும் அபாயம் தோன்றியுள்ளதாக குறிப்பிட்ட அவர், எதிர்க்கட்சிகளின் இந்தச் செயற்பாட்டுக்கு ஜே.வி.பி.யே தலைமை தாங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க, பிரதமர் முகங்கொடுக்கும் உண்மையான பிரச்சினையையே கூறியிருப்பதாகத் தெரிவித்தார்.

அத்தோடு மக்களுக்கு உண்மைநிலையைச் சொல்ல வேண்டியது பிரதமரது கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### திருமறைக் கலாமன்ற பொங்குதமிழ் விழா

திருமறைக் கலாமன்றம் நடத்தும் 2004 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழா, எதிவரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது.

பொங்கல் வைபவம், பண்பாட்டு வழிபாடு என்பன காலையில் நடைபெற்று, மாலை கலைநிகழ்வு நடைபெறவுள்ளது. பலவகை நடனங்கள், கிராமியப் பாடல்கள், கவியரங்கங்கள், நாடகம் என்பன கலைநிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளன.

### மூன்றாவது ஒருநாள் போட்டியில்

# 7 விக்கெட்டுகளால் நியூஸிலாந்து பாகிஸ்தான் அணியை வென்றது!



நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் - நியூஸிலாந்து அணி ஏழு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முன்னதாக நியூஸிலாந்து அணி நாணயச்சுழற்சியில் வென்று பாகிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதன்படி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 255 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சலீம் எலாகி 30, அப்துல் ரஸாக் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களைப் பெற்றனர். அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக், சொகைப் மாலிக் இருவரும் ஓட்டமெதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் டரல் ரபி, ஸ்கொட் ஸ்ரைறிஸ் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுகளையும், கைல் மில்ஸ், ஜேக்கப் ஓரம் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை 46.2 ஓவரிலேயே அடைந்தது.

இதில் - அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களையும், மார்ஷல் 64 ஓட்டங்களையும் பெற்றனர். பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்களின் பந்துகளை நியூஸிலாந்து அணியினர் துவம்சம் செய்தனர். இந்த ஆட்டத்தில் ஆட்டநாயகனாக ஸ்ரீபன் பிளெமிங் தெரிவுசெய்யப்பட்டார்.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களில் சொகைப் அக்தார், மொகமட் சமி மற்றும் சொகைப் மலிக் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதுவரை நடைபெற்ற மூன்று போட்டிகளில் நியூஸிலாந்து அணி 2:1 என்ற விகிதத்தில் முன்னணியில் உள்ளது. நான்காவது போட்டி எதிர்வரும் புதன்கிழமை நேப்பியரில் நடைபெறவுள்ளது.

# டெஸ்ட் போட்டி காரணமாக திருமணத்தை பிற்போட்ட வீரர்



(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான அந்த்ரே நெல்லின் திருமணம், எதிர்வரும் 17 ஆம் திகதி மாலை நடைபெறவுள்ளது. தென்னாபிரிக்க - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையேயான கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த டெஸ்ட் போட்டியில், அந்த்ரே நெல் விளையாடவுள்ளார். இதற்காக அவர் தனது திருமணத்தை 2 மணி நேரத்திற்கு பிற்போட்டுள்ளார். 17 ஆம் திகதி 2 ஆவது நாள் ஆட்டத்தை முடித்து விட்டு அன்று மாலை 6.30 மணிக்கு தென்னாபிரிக்க நேரப்படி அவர் திருமணம் செய்யவுள்ளார்.

கடந்த 7 மாதங்களில் குடும்பப் பிரச்சினை காரணமாக, அவர் 3 முறை அணியில் இருந்து விலகியுள்ளார். இதனால், தற்போது திருமணத்திற்காக அணியில் இருந்து விலக அவர் விரும்பவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 3 டெஸ்ட் போட்டிகளில் அந்த்ரே நெல் 17 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

# நெடுந்தீவு பிரதேச செயலக மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் - நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறும் 2004 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது.

உதயசூரியன் கழகத்தை எதிர்த்து ஸ்ரார் விளையாட்டுக்கழகம் முதல் அரையிறுதி ஆட்டத்தில் கலந்துகொண்டது. இதில் 10:5 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

இதேவேளை, இரண்டாம் அரையிறுதி ஆட்டத்தில் போட்டியிட்ட சென்.ஜோன்ஸ் எதிர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகங்கள் முறையே 9:3 என்ற கோல்களை ஈட்டியதனால், சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

அன்றையதினமே இடம்பெற்ற இறுதிப்போட்டியின்போது, சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் 15:5 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்து, இந்த ஆண்டுக்கான வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச்சென்றது.

தொடர்ந்து இந்த வருடத்துடன் மூன்று தடவைகள் பெண்களுக்கான வலைப்பந்தாட்டக் கிண்ணத்தை பெற்றுள்ளமையினால், பிரதேச செயலகப் போட்டி விதிப்படி - சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தை சொந்தமாகவே தமதாக்கிக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்தின் சிறந்த கோல் சூட்டராக ஜோ.மேரி சுகந்தினி மற்றும் சிறந்த கோல் தடுப்பாளராக தோ.செறின் இவோண்சியாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

2004 ஆம் ஆண்டுக்கான நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவு விளையாட்டு நிகழ்வுகளின் தொடரில் - கடந்த வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு பெண்களுக்கான கபடிப் போட்டி நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் ஸ்ரார், சென்.ஜோன்ஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் போட்டியிட்டன. இதில் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 24:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டது.

இவ்வருடத்துடன் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் ஸ்ரார் விளையாட்டுக்கழக பெண்கள் அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றுவந்தமையால் பிரதேச செயலக போட்டி விதிகளின் பிரகாரம் இவ்வருடம் கபடிக்கான வெற்றிக் கிண்ணத்தை சொந்தமாக தமதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இக்கபடிப் போட்டியின் சிறந்த வீராங்கனையாக ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இரா.பிரமாலட்சுமி தெரிவுசெய்யப்பட்டார்.(113)

# வெற்றிபெற வேண்டிய ஆட்டத்தில் தோல்வியடைந்தது வருத்தமளிக்கிறது

### இந்திய அணித்தலைவர் கங்கூலி பேட்டி

(மெல்பேர்ன்)

மூன்று நாடுகளுக்கிடையிலான, சர்வதேச கிரிக்கெட் போட்டி - அவுஸ்ரேலியாவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. தொடக்க ஆட்டத்தில் இந்தியா - உலக சாம்பியனான அவுஸ்ரேலியா அணிகள் மோதின.

முதலில் ஆடிய அவுஸ்ரேலியா 48.3 ஓவர்களில் 288 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் ஆடிய இந்தியா ஒரு ஓவர் எஞ்சியிருந்த நிலையில் 270 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது. கங்கூலி 82, டெண்டுல்கர் 63 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஒரு கட்டத்தில் இந்தியா 46 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 257 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது. 24 பந்தில் 32 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இருந்தது. 13 ஓட்டங்களில் கடைசி 6 விக்கெட்டுக்கள் சரிந்துவிட்டன.

இந்தத் தோல்வியால், இந்திய அணித் தலைவர் கங்கூலி மிகுந்த வருத்தம் அடைந்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

இந்தப் போட்டியில் வெற்றிபெற எங்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. வெற்றிபெற வேண்டிய ஆட்டத்தில் தோற்றுவிட்டோம். இது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

ஆடுகளம் - துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருந்தது. இதனால் 289 ஓட்டங்கள் என்ற இலக்கு கடினமாக தெரியவில்லை. ஓட்டங்கள் எடுக்க சிரமமே இல்லை. அடுத்துவரும் போட்டிகளில் இதைவிட சிறப்பாக விளையாடி வெற்றிபெறுவோம். இவ்வாறு கங்குலி கூறினார்.

வெற்றி குறித்து அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் நிருபர்களிடம் கூறியதாவது,

மெல்பேர்ன் மைதானத்தில் நான் விளையாடிய சிறந்த ஆட்டங்களில் இதுவும் ஒன்று. இந்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. கங்கூலியின் விக்கெட் விழுந்தது ஆட்டத்தின் முக்கிய அம்சமாகும். அதற்கு முன்பே டிராவிட்டின் விக்கெட்டைக் கைப்பற்றியது எங்களுக்கு சாதகமாக இருந்தது. பந்துவீச்சே எமது வெற்றிக்குக் காரணம். சைமன்சின் துடுப்பாட்டம் பாராட்டும்படி இருந்தது என அவர் கூறினாா.



இந்திய அணி அடுத்த ஆட்டத்தில் சிம்பாப்வேயை 14 ஆம் திகதி எதிர்கொள்கிறது. பகல் ஆட்டமாக நடைபெறும் இந்தப் போட்டி - 5 மணிக்கு தொடங்குகின்றது.

# தொகுதி பங்கீட்டுப் பேச்சு நடத்த கமல்நாத் சென்னை வருகிறார்!



நாடாளுமன்றத் தேர்தலுக்கு காங்கிரஸ் - தி.மு.க இடையே கூட்டணி ஏற்பட்டுள்ளது. சோனியாவின் தூதராக மன்மோகன்சிங் சென்னை வந்து கருணாநிதியைச் சந்தித்தபோது, கூட்டணி பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பை இருவரும் வெளியிட்டனர்.

அடுத்தகட்டமாக தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை தொடங்க காங்கிரஸ் முடிவுசெய்துள்ளது.

இதுகுறித்து, கருணாநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்த அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கமல்நாத் இன்னும் ஓரிரு தினங்களில் சென்னை வரவுள்ளார். இவர் தமிழக காங்கிரஸ் விவகாரங்களைக் கவனித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்புகொண்டு - எத்தனை தொகுதிகள் கேட்பது, எந்தெந்த தொகுதிகளைக் கேட்பது என்பது பற்றி அவர் ஆலோசனை நடத்தி வருகின்றார்.

காங்கிரசுக்கு 10 முதல் 12 தொகுதிகள் வரை கிடைக்கலாம் என, அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் 12 தொகுதிகளில் போட்டியிட்டது. மூன்றாவது அணியில் த.மா.கா. 23 தொகுதிகளில் நின்றது. தற்போது இரு கட்சிகளும் இணைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு வெற்றிவாய்ப்பு

### கருத்துக் கணிப்பில் தெரியவந்தது

(சென்னை)

மக்களவைத் தேர்தல் முடிவுகள் குறித்து சென்னை லொயாலாக் கல்லூரி மாணவர்கள் நடத்திய கருத்துக்கணிப்பில் - தி.மு.க கூட்டணிக்கு 42 வீத வாக்குகளும், அ.தி.மு.க கூட்டணிக்கு 22.4 வீத வாக்குகளும் கிடைக்கும் என்று தெரியவந்துள்ளது.

தொகுதி வாரியாக தி.மு.க 25 தொகுதிகளிலும், அ.தி.மு.க 8 தொகுதிகளிலும் 5 சதவீத வாக்குவித்தியாசத்தில் முன்னணியில் திகழ்கின்றன. மேலும், 7 தொகுதிகளில் 5 சதவீதத்திற்கும் குறைவான வாக்கு சதவீதத்தில் தி.மு.க முன்னணியிலுள்ளது.

சென்னை லொயாலா கல்லூரியின் பண்பாடு - மக்கள் தொடர்பகமும், காட்சித் தகவலியல் துறையும் இணைந்து இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தின.

பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளில் கடந்த மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரை இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

தொகுதிகளில் பெயர் தங்கிய நகரங்களிலும் தொகுதிக்கு 2 கிராமங்கள் வீதமும், மொத்தம் 4500 பேரிடம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. தொகுதிக்கு 120 பேர் வரை இதில் கருத்துத் தெரிவித்தனர்.

கருத்துத் தெரிவித்தோரில் 60.9 சதவீதம் பேர் எந்தக் கட்சியையும் சேராதவர்கள். அ.தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் 14 சதவீதமும், தி.மு.கவினர் 13.9 சதவீதமும், பா.ம.க 1.2 வீதமும், பா.ஜ.க 1.2 சதவீதமும், ம.தி.மு.க 1.2 சதவீதமும் பிற கட்சியினர் 2.7 சதவீதமும் கருத்துத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கு 37.6 சதவீதம் பேரும், அ.தி.மு.கவுக்கு 27.1 சதவீதம் பேரும பா.ஜ.கவுக்கு 6.3 சதவீதம் பேரும், காங்கிரஸ் கட்சிக்கு 8.4 சதவீதம் பேரும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு 1.3 சதவீதம் பேரும், பா.ம.கவுக்கு 1.6 சதவீதம் பேரும், ம.தி.மு.கவுக்கு 1.5 சதவீதம் பேரும், இதர கட்சிகளுக்கு 4.4 சதவீதம் பேரும், கூட்டணியைப் பொறுத்து 11.6 சதவீதம் பேரும் வாக்களிக்கப் போவதாகத் தெரிவித்தனர்.

ஆண்கள், பெண்கள் ஆகிய இரு தரப்பினரிடமும், தி.மு.க முதலிடத்தைப் பெற்றுள்ளது. தி.மு.கவுக்கு 37.6 சதவீதம் ஆண்களும், 37.1 சதவீத பெண்களும் வாக்களிக்க விருப்பம் தெரிவித்தனர். அ.தி.மு.கவுக்கு 27.1 சதவீத ஆண்களும், 27.1 சதவீத பெண்களும் ஆதரவு தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சிக்கு - 8.2 சதவீம் ஆண்களும், 10.4 சதவீதம் பெண்களும், பா.ஜ.கவுக்கு - 6.8 வீதம் ஆண்களும், 4.4 சதவீதம் பெண்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இவ்வாறு அந்தக் கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 4,446 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சிப் பிரதே சத்திலிருந்து இடம்பெயர்ந்து தற் போது, மீளக்குடியமர்ந்துள்ள மக் களில் மூன்றில் ஒரு பகுதியின ருக்கு, இதுவரை மீளக்குடியமர்வுக் கான எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையெனத் தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக் கையில் - சத்ஜெய இராணுவ நடவ டிக்கை காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து புலம்பெயர்ந்து, மீளக்குடியமர்ந்துள்ள 18 ஆயிரத்து 233 குடும்பங்களில், புனர்வாழ்வு புனர மைப்பு அமைச்சின் மீள்குடியேற்றக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகுதியானவர்கள் என 15 ஆயி ரத்து 719 குடும்பங்கள் இனங் காணப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நிக்கொட் நிறு வனத்தின் ஊடாக 9 ஆயிரத்து 275 குடும்பங்களுக்கு ரூபா 25 ஆயி ரம் மீள்குடியமர்வுக் கொடுப்ப னவுகள் வழங்கப்பட்டபோதிலும், மிகுதி 4 ஆயிரத்து 466 குடும் பங்களுக்குச் சென்ற ஆண்டு இறுதி யில் வழங்கப்படுமென புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தெரிவித் திருந்தும், நிதிப்பற்றாக்குறை கார ணமாக இதுவரை அந்தக் கொடுப் பனவுகள் வழங்கப் படவில்லை எனத் தெரிவித்தார். (09)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப்பட்ட திருவாசக விழாவில் மாணவர்களிடையே நடாத்தப் பட்ட பண்ணிசைப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவன் ஒருவருக்கு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (17)

## சின்னஞ் சிறு செய்திகள்

### கணினிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தால் கல்லூரிக்கு கணினிகள் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளது. கணினிகளை உரிய முறையில் வைத்து மாணவர்கள் பயன்படுத்துவதற்குரிய ஒழுங்குகள் இடம்பெற்று வருகிறது.

பாடசாலையில் கணினி அலகு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள தாகவும், இதனூடாக மாணவர்கள் முழுமையான கணினி அறிவைப் பெற வாய்ப்பாக அமையும் எனவும் தெரிய வருகிறது. (91)

### வலுக்கூடிய மின்சாரம் வழங்கப்பட்டது

கந்தரோடைப் பகுதியில் ஆசி ரிய கந்தசாமி வீதியில் உள்ள மின்சார பாவனையாளர்களின் நலன் கருதி வலுக்கூடிய மின்சாரத்தினை மின்சாரசபையினர் வழங்கியுள்ளனர்.

இந்தப் பகுதியில் இதுவரை கால மும் வலுக்குறைந்த மின்சாரமே வழங்கப்பட்டு வந்ததமையை அந்தப் பகுதிமக்கள் சுன்னாகம் மின் அத் தியட்சகருக்கு எடுத்துக் கூறியதை அடுத்தே மூன்று மின் கம்பிகள் பொருத்தப்பட்ட மின் இணைப்புக்க ளைக் கடந்தவாரம் முதல் பகுதி யில் பொருத்திய மின்சார சபை இதன்மூலம், வலுக்கூடிய மின் சாரத்தை வழங்கிவருவது குறிப் பிடத்தக்கது. (42)

### புனித பேதுறு ஆலயம் புனரமைப்பு

(சுதுமலை)

யாழ்.மத்திய கல்லூரிக்கு அரு காமையிலுள்ள மெதடிஸ்த புனித பேதுரு ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்திருநத மேற்படி ஆலயம் 13 வருடங்களுக் குப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மீண்டும் இந்த ஆலயம் இந்த வருடம் வழிபாட்டுக்காகப் பயன் படுத்தும் வகையில் கொரியா மெத டிஸ்த திருச்சபையின் உதவித் திட் டத்தின்கீழ் புனரமைக்கப்பட்டு வரு வதாக, நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொண்டுவரும் அருட்பணி சகோதரர் தெரிவித்தார். (91)

### சிகை ஒப்பனை நிலையங்கள் திறக்கும்

(கொக்குவில்)

தைப்பொங்கல் திருநாள் அண் மித்து வருவதை ஒட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை சிகை ஒப்பனை நிலையங்கள் திறக்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

ஆயினும் பொங்கல் தினத்தன்று நிலையங்கள் பூட்டப்படவேண்டு மென்றும், மீறுவோர் மீது தண்டப் பணம் அறவிடப்படுமென்றும், யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங் கச் செயலாளர் தெரிவித்தார். (206)

### கால் நடைக்கான இழப்பீடு 30 மில்லியன் ரூபா

(ஆழியவளை)

கடந்த கால போர் அனர்த்தங் கள் காரணமாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் கால் நடைகளுக்கு ஏற் பட்ட சேதம் 30 மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்டிப் பிரதேசத்திலேயே அதிகளவான கால்நடைகள் அழிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

கால்நடைகள் - அழிவிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப் படாமை காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. (122)

## ஹயேஸ் - மோட்டார் சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்

ஹயேஸ் வானும், மோட்டார் சைக்கிளும் மோதியதில் - மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த குடும் பஸ்தர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் தருமபுரம் வைத்தியசாலைக்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் தருமபுரம் வைத்தியசாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த நபரும், எதிரே வந்த ஹயேஸ் வானும் மோதியதி லேயே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் ந. புஸ்பராசா (வயது 26) என்ற நபரே படுகாயமடைந் தார். இவர் தர்மபுரம் வைத்தியசா லையில் அவசர சிகிச்சைக்கான அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத் தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இந்த விபத்து தொடர்பாக தருமபுர காவல்துறையி னர் விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர்.

## சிறுவர் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அனுமதி

ஏழாலை களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் சிறுவர் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த 50 மாணவர்கள்- குப்பிளான் விக் னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பதற்காக, புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தரம் 1 முதல் தரம் 11 வரை வகுப்புக்களைச் சேர்ந்த மாண வர்கள் இதில் அடங்குவர். கடந்த வருடம் இந்தப் பராமரிப்பு நிலையம், உரும்பிராயில் இயங்கியபோது, இவர்கள் அனைவரும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் கல்வி கற்றது குறிப்பிடத்தக்கது. போக்குவரத்து வசதி காரண மாகவே இவர்கள் குப்பிளானில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## போக்குவரத்து சபை பஸ்வண்டி இரவு வேளை உதவி அரச அதிபர் பணிமனையில் தரிக்கும்

நெடுந்தீவுக்கான உள்ளூர் போக் குவரத்துச் சேவை, வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்த மான பஸ்வண்டி - கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இரவு வேளையில் நிறுத்தி வைக்கப் படுகிறது.

கடந்த பல மாதகாலமாக இந்த பஸ்வண்டி, மாவிலித்துறைமுகப் பகு குதியில், போதிய பாதுகாப்பு அற்ற நிலையிலேயே நிறுத்திவைக்கப் பட்டு வந்தது.

இதேவேளை - அடிச்சட்டம் சேத மடைந்த காரணத்தால், சேவையில் ஈடுபடாதிருக்கும் இன்னொரு பஸ் வண்டி - மாவிலித் துறைமுகப் பகு தியிலுள்ள வாடிவீட்டு வளாகத்தில் பாதுகாப்பு வசதிகள் எதுவுமின்றி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், தற் போது இந்தப் பஸ்வண்டி, கட் டாக்காலி ஆடுகளின் தங்குமிடமாக மாறி வருகின்றமை சுட்டிக் காட்டத் தக்க தாகும். (113)

## ஓட்டுமடம் பஸ் விபத்தில் சிறுவனொருவன் படுகாயம்

ஓட்டுமடச்சந்தியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந் தமான பஸ்வண்டி மோதியதில் - சைக்கிளில் பயணஞ்செய்த சிறுவன ஒருவன் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகரிலிருந்து பயணிகளுடன் முகமாலை நோக்கி வந்த 89/1 இலக்க பஸ் - ஓட்டுமடம் சநதியில் விபத்திற்குள்ளாகியது. ஓட்டுமடம் வீதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளுக்கு இடம்கொடுக்க முற்பட்ட போதே விபத்து இடம பெற்றுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த சாரதி பஸ்ஸை சந்தியில் இருந்து வீடு, கடையுடன் மோதி கழிவு வாய்க்காலுக்குள் இறக்கிவிட்டார். பஸ்ஸில் மோதிய சிறுவன் வாய்க்காலுக்குள் விழுந்தமையால் பலத்த காயத்து டன் தப்பியுள்ளார்.

தலையிலும் கால்பகுதியிலும் காயமடைந்த அன்ரனி - றொசான் வயது - 12 என்ற சிறுவன் - சிகிச்சைககாக யாழ். போதனா வைத்தியசா லையில் அனுமிதக்கப்பட்டுள்ளார். (91,46,44)

## கிளிநொச்சி பகுதிக்கான நீர்வழங்கல் சீரற்ற முறையில் நடைபெறும் பணிகள்!

### நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைமுகாமையாளருக்குக் கடிதம்

நீர் வழங்கல் வடிகால் அமை ப்புச் சபையினரால் மேற்கொள்ளப் படும் கிளிநொச்சி நகரப் பகுதிக் கான நீர் வழங்கல் செயற்பாடுகள் சீரற்றமுறையில் இருப்பதன் காரண மாக. குடிநீரைச் சீரான முறையில் பெற்றுக்கொள்ள முடியாதிருப்ப தாகச் சுட்டிக்காட்டி - கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், நீர் வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளருக்குக் கடிதம் எழுதி யுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது - தங்களுடைய மேற்பார்வையின்கீழ் இடம்பெற்று வரும் கிளிநொச்சி - நகர அவசர குடிநீர் தேவைக்கான குழாய்களைப் பதிப்பதற்கு, வீதி ஓரங்களிலும், குறுக்கு வீதிகளை ஊடறுத்தும் வாய்க்கால்கள் வெட்டப்பட்டு, குழாய கள் பதித்தமுறை, விஞ்ஞானரீதி யாக நீர்கொண்டு போகக்கூடிய அளவிற்கு இல்லை.

ஒப்பந்தக்காரர் நேராக இதனைப் பதித்துச் செல்வதற்குப் பதிலாக- மரங்களையும், வேறு கடினமான நிலப்பகுதிகளையும் தவிர்த்து வாயக் கால் வெட்டக்கூடிய நிலம் ஊடாக நீண்டவிளைவுகளைக் கொண்டதாக சீரற்றமுறையில் இந்த வேலை களைச் செய்துள்ளார்கள். உண் மையில் இதன்மூலமாக மக்கள் குடி நீரை சரியானமுறையில் பெற்றுக் கொள்வார்களா? என்பதனை உறு திப்படுத்தவேண்டிய பொறுப்பும், கடப்பாடும் இருக்கிறது என்பதை கவனத்திற்குக்கொண்டு வருகின் றேன். மேல் குழாய்கள் பதிப்பதற்கு வெட்டப்பட்ட - மண் சில இடங் களில் குழியை மூடுவதற்கு முழு மையாகப் பயன்படுத்தாது விடப் பட்டுள்ளது.

சரியானமுறையில், குழிகள் மூடப்பட்டு, மொங்கான் இட்டு இறுக் காத காரணத்தால், பல பசுமாடுகள் அந்தவாய்க்காலில் காலைப்பதித்த போது, கால்முறிந்து சேதத்திற்கு உள்ளாகியது பற்றி எனக்கு அறிவிக் கப்படடுள்ளது. இது பாரதூரமான தவறாகும். குறிப்பாக ஒப்ந்தக்காரர் பொதுஇடங்களிலும், வீதிகளிலும வெட்டப்பட்ட எல்லாக் குழிகளையும், வாய்க்கால்களையும் அதே மண் மட்டுமன்றி, வேறு இடங்களின் இருந் தும் மண் கொண்டு வந்து மூடி, மொங்கான் இட்டு சாதாரண மக்கள் போகக்கூடியளவிற்கு திருப்திகரமா கச் செய்துகொடுக்கவேண்டிய கடப் பாடு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட் டுள்ளது. பொது வீதிகளைக் குறுக்காக வெட்டியவர்கள் அதனைச் சரியான முறையில் மூடாத காரணத்தினால் வாகனங்கள் விழுந்துசெல்ல வேண் டிய ஒரு பரிதாப நிலைக்குள்ளாக் கப்பட்டுள்ளது.

ஆகவே, ஒரு வாரகாலத்திற்குள இதனைச் சீர்செய்யாதுவிட்டால் சட்ட நடவடிக்கை எடுத்து சகல நட்ட ஈடுகளையும் உங்களிடமிருந்தும், ஒப பந்தக்காரரிடமிருந்தும் அறவிடுமாறு கேட்கவேண்டி ஏற்படும் செய்துள்ள தென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (9)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1

நான்காவது அகவையில்



பெயர் : கி.தனுசியன்
முகவரி : குருக்கஞர், வவுனியா.

## தேங்கிக் கிடக்கும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் விசேட சேவைமூலம் விநியோகிக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மோட்டார் போக்குவரத் துத் திணைக்களத்தில் தேங்கிக் கிடந்த சாரதி அனுமதிப்பத்திரங் கள் விசேட சேவையின்மூலம் வழஙகப்பட்டு வருகின்றன. என யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தின் உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த வருடம் - அதிகளவிலான சாரதிகள் - சாரதி அனுமதிப்பத்தி ரத்தினைப் பெற்றிருந்தனர். எமது நடமாடும் சேவையே இதற்குப் பெரி தும் துணையாக இருந்தது.

நடமாடும் சேவைமூலம், சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றவர்களது 3 ஆயிரத்திற்கும் அதிகமான சாரதி அனுமதிப் பத்திரங்கள் தேங்கிக் கிடந்தன. அவை தற்போது பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரையான கடமை நாட்களில் நடைபெறும் விசேட சேவைமூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது மிகக்குறைவான வாகன அனுமதிப்பத்திரங்கள், சாரதி அனு மதி பத்திரங்கள், இலக்கத்தகடுகள் என்பனவே தேங்கிக் கிடக்கின்றன.

இவற்றை உரியவர்கள் உரிய நேரத்தில் வந்து தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதில் நாம் எவ்வாறு விரை வாகச் செயற்படுகின்றோமோ, அவ் வாறே பொதுமக்களும் அவற்றைப் பெறுவதில் அக்கறைகாட்டவேண் டும்.

தினமும் நூற்றுக் கணக்கானோர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறு வதற்கான பரீட்சைகளில் தோற்று கின்றமை மகிழ்ச்சியை அளிக்கிறது.

மிகவிரைவிலேயே இலங்கை யின் ஏனைய பகுதிகளிலுள்ளது போல், கட்டாயமாக அனைவரும் சாரதி அனுமதிப் பத்திரத்தினை வைத்திருக்கவேண்டும் என்ற நடை முறை பின்பற்றப்படவிருக்கிறது.

இதற்கு முகங்கொடுக்கும் வகை யில், யாழ் குடாநாட்டிலுள்ள அனைத்து வாகனச் சாரதிகளும் தயாராக இருக் கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# முடிந்தும் முடியாத

## விளையாட்டு அரங்கம்

பலகோடி ரசிகர்கள் பல சாதனை வீரர்கள் கிரிக்கெட் உலக ஜாம்பவான்கள், விமர்சகர்கள், அணித்தலைவர்கள், கிரிக்கெட் முன்னணி நாயகர்கள் பலரின் பலவித விமர்சனங்கள்- ஆவல்கள்- கண்டனங்கள் மத்தியில் - ஆரம்பித்த மாபெரும் கிரிக்கெட் திருவிழா இந்திய - அவுஸ்திரேலிய டெஸ்ட்தொடர்.

கடந்த 6 ஆம் திகதி, போட்டித் தொடர் முடிவுற்றது. போட்டியின் முடிவு என்னவோ ட்ரோதான். ஆனால், இரு அணிகளும், அணி வீரர்கள் ஒவ்வொருவரும் சாதித்த சாதனைகள் பல. ஆடிய ஆட்டங்கள் வர்ணிக்க இயலாதவை. ஒவ்வொரு போட்டிகளிலும், ஒவ்வொரு இன்னிங்ஸிலும் ஒவ்வொரு அணி வீரர்களும், தூள் கிளம்பினர். இந்தப் போட்டியில் விளாசப்பட்ட இரட்டைச் சதங்கள் மட்டும் 4, சதங்கள் 6, அரைச்சதங்கள் 15 இற்கு மேல். 5 விக்கெட்டுக்குமேல் ஒரு வீரரால் கைப்பற்றப்பட்டவை 5 தடவைக்குமேல். போட்டித் தொடர் என்றால் இது அல்லவா என்று ரசிகர்கள் கும்மாளித்தனர்.

ஒவ்வொரு போட்டியிலும் ஒவ்வொரு இன்னிங்ஸிலும் இது என்னோட இன்னிங்ஸ், பார் ஜமாய்கிறேன் என்று ஒவ்வொரு வீரரும் போட்டிககு மெருகூட்டினர்.

அந்தவகையில் பிரிஸ்பேர்னில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் - அவுஸ்திரேலிய



ட்ராவிட் சாதுவல்ல

வி.வி.எஸ். லக்ஷ்மன் இரும்புத்திரை

சச்சின் என்றும் எனதே

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஜஸ்டின் லாங்கர் - 'நான் சொன்னதைத்தான் செய்வேன், செய்வதைத்தான் சொல்வேன்' என்றரீதியில் முதல்நாள் ஆட்டத்தில் இந்திய பந்து வீச்சாளர்களின் பந்துகளை ஒரு பிடிபிடித்து விளாசினார் ஒரு சதம்.

ஆகா, இரு கவனிக்கிறேன் என்று சகீர்கான் அவுஸ்திரேலிய அணியினர் 5 விக்கெட்டுகளைப் பிடுங்கினார். அடுத்தநாள் அகார்கர் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்ற, அவுஸ்திரேலியா ஒரு குறிப்பிட்ட ஓட்ட எண்ணிக்கையுடன் கட்டுப்பட்டது.

பின்னர் இந்திய அணியினர் தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்தனர். ஆரம்ப விக்கெட்டுக்கள் சரிந்தாலும், அணித்தலைவர் சௌரவ் கங்கூலி, வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஆகியோர் அந்த "இன்னிங்ஸில் சிறப்பாக விளையாடினார்கள்.

பலரின் கருத்து - கங்கூலி வேகப்பந்துக்கும் பவுண்சர்களுக்கும் தடுமாறுவர் என்று. ஆனால், எனக்கு பவுண்சர்கள் புதிதல்ல. வேகம் எனக்குச் சாதகம்தான் என, அவுஸ்திரேலியர்களின் பவுண்சர் தாளங்களுக்கு "ஆடினார்" ஒரு ஆட்டம். அதில் தன் 11 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்திசெய்தார்.

இவ்வாறு இரண்டாவது டெஸ்ட்டில் சீறியவர் ரிக்கிபொன்டிங், முதல் டெஸ்ட்டில் விட்ட குறையை இதில் சரிசெய்தார். இந்திய வீரர்களை நாலாபுறமும் ஓட ஓட விரட்டி இரட்டைச் சதம் பெற்றார். இருங்கள் கவனிக்கிறேன் என்று, தங்கள் இரண்டாவது இன்னிங்ஸில் இது எம்மோட இன்னிங்ஸ் என்று தூள் கிளப்பினார்கள் ராவிட், லகஸ் மன்ஜோடி. அவுஸ்திரேலியர்கள் போதும் போதும் என்னும் அளவிற்கு சாத்திவிட்டார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் என்னாலும் அவுஸ்திரேய விக்கெட்டுக்களை சாய்க்க முடியுமென்று, 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி, இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்குப் பாதை அமைத்தார், அகார்கர் துடுப்பாட்டக் காரராக உருவாகவேண்டுமென்று அணியில் புகுந்தார். ஆனால், 'தம்பி உனக்குப் பந்து வீச்சுத்தான் சரி' என்று அவரைத் திசைமாற்றியவர் சச்சின் ரமேஸ் டெண்டுல்கர்.

3 ஆவது போட்டியில், அவுஸ்திரேலியப் பத்திரிகைகளாலும், விமர்சகர்களாலும் சீண்டப்பட்ட அவுஸ்திரேலியா - புதிய ஆக்ரோசத்துடன் களம் இறங்கியது. ஆனால், இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட மின்னல்வேக அதிரடி ஆட்டக்காரர் வீரேந்தர் சேவாக்- பிரட்ல என்ன பிரம்மனே வரட்டும் என்று அவுஸதிரேலியர்களைப் பதம்பார்த்தார்.

சரியா இனி எங்கள் ஆட்டம் என்று ஆடினார்கள் மத்தியூ ஹேய்டனும், ரிக்கிபொண்டிங் ஆகிய இருவரும் முறையே சதமும், இரட்டைச் சதமும் பெற்றார்கள். அனில் கும்ளே என னாலும் சிறப்பாக சுழற்ற முடியுமென்று அவுஸ்திரேலிய வீரர்களை ஒரு சுழற்றுச் சுழற்றி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆனாலும், முடிவு அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

"என்னப்பா எல்லோரும் விளாசுகிறார்கள் நம்ம ஆள் ஒன்றும் சாதிக்கவில்லை என்று மாஸ்ரர் பிளாஸ்டரின் ரசிகர்கள் கவலைப்பட இது என்னோட இன்னிங்ஸ் என்று, தூள் கிளப்பி அதிரடியாக விளாசத் தொடங்கினார் மாஸ்ரர் பிளாஸ்டர், நட்சத்திர துடுப்பாட்ட வீரர், இந்திய அணியின் பலமான தூண்களில் ஒன்று, அதுதான் சச்சின் டெண்டுல்கர். விட்டகுறை, தொட்ட குறை எல்லாம் சேர்த்து 11 மாத ரசிகர்களின் ஆவல்பசிக்கு தகுந்த விருந்தளித்தார். போதாதற்கு, அவருக்குப் பக்கபலமாக நின்று அவுஸ்திரேலியர்களைப் பதம் பார்த்தார் வி.வி.எஸ்.லக்ஸ்மன். அவுஸ்திரேலிய அணியில் வழமையாகப் பந்து வீசாத மாட்டின் கூட பந்துவீசிப் பார்த்தார். ஆனால், இந்த ஜோடியைப் பிரிக்கமுடியவில்லை. நான்காவது விக்கெட்டுக்காக இருவரும் 353 ஓட்டங்களைப்பெற்று, உலக சாதனை படைத்தார்கள்.

இந்த இன்னிங்ஸ் ஓர் அற்புதமான இன்னிங்ஸ். சச்சின் 33 பவுண்டரிகளும், லக்ஸ்மன் 30 பவுண்டரிகளும் விளாசினார்கள். ஆனால், ஒரு சிக்ஸர்கூட இல்லை. அவுஸ்திரேலியர்களே உங்கள் கைகளுக்கு எட்டக்கூடியதாகவே பந்தை அடிக்கிறோம். முடிந்தால் தடுத்துப்பாருங்கள் என்று அவர்களைப் பந்துக்குப்பின் ஓடச்செய்தார்கள். உண்மையில் அவ்வாறனதொரு இன்னிங்ஸ் விளையாடப்படவில்லை. அந்த இன்னிங்ஸில் இந்திய அணியால் அடிக்கப்பட்ட பவுண்டரிகள் மட்டும் 100. ஆனால், சிக்ஸர் ஒன்றே ஒன்றுதான்.

அந்த இன்னிங்ஸின் அனில் கும்ளே சாதனைபடைத்த இன்னிங்ஸ். ஆம் இதில் 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அவுஸ்திரேலிய அணியை திக்குமுக்காடச் செய்தார். 100 வருடங்களின் பின் அவுஸ்திரேலிய மண்ணில் இடம்பெற்ற சாதனை இதுவாகும்.

அவுஸ்திரேலிய அணியின் ஜஸ்டின் லாங்கர் அந்தப் போட்டியில் சதம். யாரும் எதிர்பார்க்காத பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர் இப்படித்தான் ஆடவேண்டும் என்று, ஆடிச் சதம் பெற்றவர். இரண்டாவது இன்னிங்ஸிலும் அற்புதமாக விளையாடிப் போட்டியைச் சமநிலை செய்த வீரர் சைமன் கட்டிச்.

மேற்கூறிய வீரர்கள் ஒவ்வொருவரும், தங்களுடைய உச்சதிறமையை வெளிக்காட்டிய சாதனைகள் படைத்த போட்டியாக அமைந்தது இந்திய- அவுஸ்திரேலிய டெஸ்ட்தொடர். இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல், விமர்சித்த விமர்சனங்களை தகர்த் தெறிந்து, இறுதிவரை போராடிய போட்டியாக அமைந்தது. இரு அணிகளிலும் உள்ள கப்டன்கள் உண்மையில் போற்றத்தக்கவர்கள். அதிலும் 'வங்கத்துப் புலி' சௌரவ் கங்கூலி அருமையான ஒரு கப்டன். மைதானத்தில் அவர் அமைக்கும் வியூகங்கள் உலகில் மிகவும் சிறந்த கிரிக்கெட் வீரர்களான சச்சின், ராவிட், லக்ஸ்மன், கும்ளே ஆகியோரை தகுந்த மாதிரிக் கையாளும் திறன் அவருக்கே உரியது.



ரிக்கிபொண்டிங் ஆரம்பம் இன்னொரு சகாப்தம்

1999 இன் பின் விளையாடாமல் இருந்த ஆஷிஸ் நெக்ராவை அணியில் கொண்டுவந்தார். முதல் டெஸ்ட்டில் அணித்தலைவனுக்குரிய பொறுபபை உணர்ந்து, நிதானமாக ஆடி போட்டியை நல்ல நிலைக்கு உயர்த்தியவரும் இவரே. பொதுவாக கங்கூலி பல ஓய்வு பெற்ற முன்னணி வீரர்களால் பல கண்டன விமர்சனங்களுக்கு ஆளாகியிருக்கிறார். ஆனால், இம்மாதிரியான விமர்சனங்கள் இனிமேல் இவர்மேல் கூறுவது கவனத்தில் கொள்ளவேண்டியவிடயம்.

மைதானத்தில் வீரர்களுடன் கடுமையாக இருந்தாலும், அது அணித்தலைவருக்கு இருக்கவேண்டிய முக்கிய குணங்களில் ஒன்று. மைதானத்திற்கு வெளியே கலகலப்பாக பழகுவதில், அவருக்கு நிகர் அவரே. அவரிடம் உள்ள அடங்காத தன்மையும் போராடும் குணமும், அணியின் தலைவனாக இருந்து செயற்படும் விதமும், இந்திய அணிக்கு அவர் தலைவராக கிடைத்தது பெரும்பேறாகும். நிச்சயம் இவர் தலைவராக இன்னும் சில காலம் இருந்தால் இந்திய அணி உலகின் முதல்தர அணியாக நிச்சயம் வந்துவிடும்.

# உணர்ச்சித் தொடர்



ஸ்ரீவ்வோ ஜென்ரில்மென்

இந்த டெஸ்ட்போட்டியுடன், தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் கப்டன் ஸ்ரீவ்வோ, தற்போது விளையாடிக்கொண்டிருக்கும் கிரிக்கெட் வீரர்களுக்கெலலாம் முன மாதிரியாக விளங்கும் ஓர் அற்புத விளையாட்டு வீரர். போட்டியின் எந்த நிலையிலும் மனதை ஒரு நிலையில் வைத்திருக்கக்கூடிய ஒருவர்.

பொதுவாக அவுஸ்திரேலிய வீரர்கள் மைதானத்தில் எதிரணி வீரர்களுடன் காரமாகத்தான் நிற்பார்கள். ஆனால், ஸ்ரீவ்வோ அதற்கு முற்றிலும் வேறுபட்டவர். அதற்கு எடுத்துக்காட்டான சம்பவம், மூன்றாவது டெஸ்போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் சௌரவ் கங்கூலியை பிரட்லியின் பந்து தோள்பட்டையில் தாக்கியது. கங்கூலியை நோக்கி ஓடோடிவந்த ஸ்ரீவ்வோ, கங்கூலியைத் தடவிக்கொடுத்து, கங்கூலி, பலமாக பந்து தாக்கிவிட்டதா ரொம்பவும் வலிக்கிறதா, சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்று, அன்பாக விசாரித்தார். இந்தச் சம்பவம், ஏனைய அவுஸ்திரேலிய வீரர்களுக்கு ஒரு சிறந்த பாடம்.

அதற்கு கைமாறோ அல்லது அப்படிப்பட்ட சிறந்த அணி வீரன், அணித்தலைவன் தன் சொந்த இடத்தில் அவருக்காகவே வந்திருந்த பல்லாயிரம் ரசிகர்கள் முன், நான்காவது டெஸ்ட்போட்டியில், பலோ - ஒன்னை தவிர்க்க இயலாது, இரண்டாவது இனனிங்சை துடுபபெடுத்தாட வேண்டியநிலை ஏற்பட்டது. அந்த நிலை அந்த சிறந்த வீரனுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக, சௌரவ் அந்த நிலையைத் தவிர்த்து, தாங்கள் இரண்டாவது இன்னிங்சில் வேகமாக ரன்களைக் குவித்து, ஒரு குறித்த இலக்கை நிர்ணயித்து, அவர்களை இரண்டாவது இன்னிங்சை ஆடவைத்தார்.

சௌரவ் போன்ற வீரர்கள், ஸ்ரீவ்வோவைப் பார்த்து வளர்ந்தவர்கள்தான். எதிரணி வீரர்களே ஸ்ரீவ்வோவை பின்பற்றி வளர்வார்கள் என்றால், ஏன் அந்த அணிவீரர்களால் முடியாது. சிறந்த வீரர்களாக மட்டும் இருந்தால் போதாது, எதிரணி வீரர்களுடன் நடக்கும் முறையில்தான் அவர்கள் அதி சிறந்த வீரர்களாக ஆகின்றார்கள். இந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி சார்பில், பொண்டிங், லாங்கர், ஹெயடன், கடடிச் ஆகியோரே சதம் அடித்தவர்கள். ஆனால், இந்திய அணி சார்பில் - சேவாக், கங்கூலி, ராவிட், லக்ஸ்மன், சச்சின் ஆகியோர் சதம் விளாசினார்கள். அவுஸ்திரேலிய அணியில், ஐந்து விக்கெட்டுக்க ளுக்குமேல் ஒருவரும் கைப்பற்றவில்லை. ஆனால், இந்திய அணியில், கும்ளே மூன்று தடவையும், சகீர்கான், அகர்கர், ஆகியோர் தலா ஒருமுறையும் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள். முடிவு என்னவோ ட்ரோதான். ஆனால் இந்திய அணி சாதித்தது பல, தங்கள் அணி யைக் கண்டித்து விமர்சித்தவர்களை, தோற்கடித்து, அவர்களை வெற்றிகொண்டார்கள். மோசமாக தோற்பார்கள் என்று கூறியவர்கள்மீது, வெற்றிகொண்டார்கள். தங்கள் அணிமீதும், அணி வீரர்கள்மீதும் மிகுந்த நம்பிக்கைகொண்டு, போட்டியை ரசித்த ரசிகர்களின் எண்ணங்களை, மனங களை நோகவிடாமல் அவர்கள் மனங்களை வெற்றி கொண்டார்கள். மொத்தத்தில் இந்திய அணி, இந்தப் போட்டித்தொடரை புள்ளிவிபர அடிப்படையைவிட மற்ற எல்லா விதங்களிலும் வெற்றியீட்டியுள்ளார்கள். இது போன்றே முத்தரப்பு ஒருநாள் போடடித் தொடரிலும் இந்திய அணி சிறப்பாக விளையாடவேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருப்போம்.

மாயவன்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# கண்டு கொண்டேன்

அவுஸ்திரேலியாவிற்கு எதிரான நான்காவது போட்டியில் - இந்தியா குவித்த ஓட்டங்கள் 705. இதற்குப் பதிலாக எந்தவொரு அணியாக இருந்தாலும் இரண்டு இன்னிங்சுகளிலும் சுருண்டு தோல்வி கண்டிருக்கும். ஆனால் அவுஸ்திரேலியாட்ரோ செய்யும் எனபதே பலரின் துணிவாக இருந்தது. அதுவே நடைபெற்றது. அதற்கான காரணிகள் பல வாக இருந்தாலும் திடீரென தனது துடுப்பாட்டத்தால் பிரபல்யமான சைமன் கட்டிச் ஒரு காரணம். அவர் இரண்டு இன்னிங்ஸ்களிலும் அவுஸ்திரேலிய அணி யின் கௌரவத்தைக் காப்பாற்றியவர். மதிப்புக் குரியவரான ஸ்ரீவ்வோ துன்பமயமாகத் தன் இறுதி டெஸ்ட் போட்டியை முடித்துக்கொள்ளும் அபாக்கியத்தில் இருந்து காப்பாற்றியவர்.

மேற்கு அவுஸ்திரேலியாவைச் சொந்தஇடமாகக் கொண்ட கட்டிச், முதல் இன்னிங்சில் பெற்ற ஓட்டங்கள், அவுஸ்திரேலிய அணியின் மொத்தத் தொகையான 474 இல் 125. இந்த ஓட்ட எண்ணிக்கையும் கட்டிச்சின் ஆட்டப்பாங்கும் இந்தியாவிற்கு வெறுப்பேற்றின.



சைமன் கட்டிச் அழகிய ராட்சசன்

இதேபோல இரண்டாவது இன்னிங்சில் ஆட்டமிழக்காது, இவர் பெற்ற 77 ஓட்டங்கள் ஆட்டத்தை சமநிலைக்குக் கொண்டு செல்லப் பெரும் உதவி புரிந்தது.

எனவே, அடுத்த மாதம் இலங்கைக்கு வரவிருக்கும் அவுஸ்திரேலிய அணியில், சைமன் கட்டிச்சின் மத்தியவரிசை இடம் தவிர்க்கமுடியாதபடி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதகக் கூறப்படுகிறது. தற்போது 28 வயதாகும் கடிச் ஐந்து வருடங்களுக்கு முன் இலங்கைக்கு வந்தவர். ஆனால், அவர் பொக்குழிப்பான் நோயால் பாதிக்கப்பட, வெறும் பார்வையாளராகவே இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அதனைத் தொடர்ந்து வந்த விஷக்காய்ச்சலால், உள்ளூர் போட்டிகளை முற்றாகவே இழந்தார். இந்த நிலை இவரது டெஸ்ட் வாழ்வை இன்னும் சிறிது பின்தள்ளியது.

இவர் தனது டெஸ்ட் சதம் பற்றிக் கூறுகையில், அனில்கும்ளேயின் உச்சத்திறன் பந்துவீச்சு ஒருவகையில் தனக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்தது என்கிறார். நிறைய வீரர்களைக் கொண்டிருக்கும் அவுஸ்திரேலிய அணியில் சில வருட இடைவெளிகள் தன்னால் இடம்பிடிக்க இயலும் என்றுதான் நம்பியிருக்க

கண்டு கொண்டேன்

விலலை என்கிறார் இவர். இவரது ஸ்தானம் மத்திய வரிசையாகும். ஸ்ரீவ்வோவும் மத்திய வரிசை ஆட்டக்காரரே. ஆனால் தற்போது மத்திய வரிசை ஆட்டக்காரர் இருவரின் இடத்துக்கு பலமுனைப்போட்டி நிலவுகிறது. அணியில் நிரந்தர இடம் பிடித்துள்ள டரன் லேமன், புதியவீரர் மைக்கல் கிளாக், குயின்ஸ்லாந்து பிராந்தியத்தின் மார்டின் லவ். இவர்களில் உபாதைகள் இன்றி இருப்பின் டரன் லேமனின் இடம் உறுதியானது. எனவே, இரண்டாம் இடம் யாருக்கு? அனேகமாக சைமன் கட்டிச் தான் அந்த இடத்தை நிரப்புவார் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தியாவின் உபதலைவர் ராவிட் - கட்டிச் பெற்றசதம் பற்றிக்கூறுகையில், மிகுநத அழுத்தமான சூழ்நிலையில் வளர்த்தெடுக்கப்பட்ட மிகச்சிறந்ததொரு இன்னிங்ஸ் என கட்டிசைக் கூறுவேன் என்று மனதாரப் பாராட்டியுள்ளார். இப்பொழுது ஆர்வத்துக்குரிய விடயம் இலங்கை ரசிகர்களைப் பொறுத்தவரையில் அவுஸ்திரேலியாவின் இலங்கை விஜயம்தான். அந்த அணியில் கட்டிச் இருந்தால், மிகச்சுலபமாக அதோடு பயமின்றி ரன்களைச் சேகரிக்கும் அழகைக்காணலாம்.

**-செந்தூரம்-**

# சிங்கத்தை உசுப்பக்கூடாது



ஜிலெஸ்பி இது அமைதியல்ல

அவுஸ்திரேலியா - இந்தியா டெஸ்ட் தொடர் முடிவடைந்து, தற்போது அவுஸ்திரேலியா, இந்தியா, சிம்பாப்வே நாடுகளுக்கிடையிலான, முத்தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டிகள் ஆரம்பித்துவிட்டன. இந்நிலையில், இந்தியாவின் எழுச்சியானது பலரும் அவுஸ்திரேலிய அணி பற்றிய கருத்துக்களைக்கூறும் சந்தர்ப்பத்தைத் கொடுத்துள்ளது. தற்போது அவுஸ்திரேலியாவின் முக்கோணப் போட்டித் தொடருக்காக, அங்கு நிற்கும் சிம்பாப்வே அணியின் தலைவர் ஹீத் ஸ்ரீக் சில கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். ஸ்ரீக் தனது கருத்தாக அவுஸ்திரேலிய அணி வீரர்கள் பலர் சிறிது வயதாகிக் கொண்டிருப்பதனைத் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தக் கருத்தானது, முத்தரப்புச் சுற்றுப் போட்டியில் திடீர் விறுவிறுப்பை ஏற்படுத்திவிட்டது. தற்போதைய அணியில் உள்ள வீரர்கள் பற்றிக்கூறிய இவர், இதன் காரணமாகவே அவுஸ்திரேலிய A அணியில் நிறைய இளைஞர்களை உள்வாங்கியிருக்கிறார்கள்போல இருக்கிறது. அதாவது விரைவில் அவுஸ்திரேலிய பெயர்பெற்ற வீரர்கள் ஒதுக்கப்பட்டு, இளம் வீரர்கள் அவுஸ்திரேலிய அணியினுள் நுழைவது அவசியம் என்ற தொனியே ஸ்ரீக் உடைய கருத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது. இதில் என்ன கவனிக்க வேண்டிய விடயமெனில், அவுஸ்திரேலிய அணியுடன் ஒப்பிடும்போது சிம்பாப்வே அணி மிகவும் பலம் குறைந்தது என்பதனை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இந்தியாவிடம் தார்மீகத் தோல்வியைக் கண்டிருக்கும் அவுஸ்திரேலியா, சிம்பாப்வே அணித்தலைவரின் எந்தக்கருத்தையும் கேட்கும்போது, மிகுந்த ஆவேசம் அடையும் என்று, எதிர்பார்க்கலாம். எனவே, முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் சூறாவளி அடிப்பதைப்போலத்தான் இருக்கப்போகின்றது.

**ஜெராட்**

# வேகமாக சதம் குவித்தோர்

குறைந்த பந்துகளைச் சந்தித்து, டெஸ்ட் சதம் பெற்றோர் பட்டியல் மீளவும் ஒரு முறை புதுப்பிக்கப்பட்டுள்ளது. அந்த விபரம் பின்வருமாறு -

**56 - விவியன் றிச்சட்ஸ் (மே.இ. தீவுகள்) எதிர் இங்கிலாந்து - அன்ரிகுவா 1985-86**
**67 - ஜெக்கிரகரி (அவுஸ்) எதிர் தெ.ஆபிரிக்கா - ஜொகனஸ்பேர்க் 1921-22**
**69 - சிவ்நாரெய்ன் சந்தர்போல் (மே.இ.தீவுகள்) எதிர் அவுஸ்திரேலியா - ஜோர்ஜ்ட் டுன் கயானா - 2002-03**
**71 - ஜோய் பிரெட்றிக்ஸ் (மே.இ.தீவுகள்) எதிர் அவுஸ் - பேர்த் - 1975- 76**
**74 - மொகமட் அஸாருதீன் (இந்தி) எதிர் தெ.ஆபி - கல்கத்தா - 1996-97**
**74 - மஜிட்கான் (பாகி) - எதிர் நியூசிலாந்து - கராச்சி - 1976-77**
**74 - கபில்தேவ் (இந்தியா) - எதிர் இலங்கை - கான்பூர் - 1986-87**
**76 - கில்பேட் ஜெசொப் (இங்கிலாந்து) -எதிர் அவுஸ்திரேலியா ஓவல் - 1902**
**79 - கிறிஸ்கைல் (மே.இ) எதிர் தெ.ஆபிரிக்கா - கேப்ரவுண் - 2003-04**
**84 - மத்தியூஹேய்டன்(அவுஸ்) எதிர் சிம்பாப்வே - சிட்னி - 2003-2004**

# டெஸ்போட்டியில் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற இந்திய வீரர்கள் வரிசை

281 - வீ.வீ.எஸ் லக்ஸ்மன் எதிர் அவுஸ்திரேலியா (கல்கத்தா 2001)
241* - சச்சின் டெண்டுல்கர் எதிர் அவுஸ்திரேலியா (சிட்னி 2004)
236* - சுனில் கவாஸ்கர் எதிர் மேற்கிந்தியத்தீவுகள் (சென்னை 1983)
233 - ராகுல் ராவிட் எதிர் அவுஸ்திரேலியா (அடிலெய்ட் 2003)
231 - வினுமன்காட் எதிர் நியூசிலாந்து (சென்னை 1956)
227 - வினோத்காம்ப்ளி எதிர் சிம்பாப்வே (நியூடெல்கி 1993)

# நாம் எங்கே நிற்கிறோம்

அரவிந்த டி சில்வாவின் சிந்தனையில் உருவாகியுள்ள அருமையானதொரு கிரிக்கட்டு சுற்றுப்போட்டிதான் 'ten sports' மாகாண மட்டத்திலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி. இதில் ஒரு விசேடம் தேசிய அணியின் வீரர்களும் பங்குபெறச் செய்யப்படவேண்டும் என்ற சிந்தனையில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, சிம்பாப்வே நாட்டுக்கான 'A' அணியின் சுற்றுப்பயணம்கூட இச்சுற்றுப்போட்டிக்காக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.



கனவுகள் கற்பனைகள்

இந்தச் சுற்றுப்போட்டியில் இதில் காணப்படும் திறமையும், அருமையும் உள்ள வீரர்கள் 'A' அணிக்குள் உள்வாங்கப்பட்டுப் பின்னர் அடுத்த கட்டமாக தேசிய அணிககுள் நுழையும் சந்தர்ப்பத்தைப் பெறுகிறார்கள். இந்த வகையில் சர்வதேச அறிமுகத்துக்கு தயாராக, பல வீரர்கள் உருவாகிவிடுகிறார்கள் என்பதும் உண்மையே. மேலும இங்கிலாந்தில் அல்லது அவுஸ்திரேலியாவில் உள்ளதுபோன்றே மிகவும் உயர்தரம் வாய்நத உள்ளூர் சுற்றுப்போட்டி ஒன்றை நிறைவு செய்வதற்கும் இது அமையும்.

நடைபெற இருக்கும் இச்சுற்றுப் போட்டியில் சம்பியன் பட்டம்பெறும் அணி ஒரு மில்லியன் ரூபாவையும், இரண்டாம் இடம்பெறும் அணி ஐந்துலட்சம் ரூபாவையும் பெறுவர். ஆட்டத் தொடர் நாயகன் - ரூபா ஒரு லட்சத்தையும், சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் பந்துவீச்சாளருக்கு ரூபா எழுபத்தையாயிரம் ரூபாப்படியும் வழங்கப்படும்.

அரவிந்த கருத்து கூறும்போது, முன்னதாக ஏழு மாகாணங்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவிருந்ததாகவும், ஆனால் இரண்டு மாகாண அமைப்புக்கள் செயற்பாடு குறைபாடு காரணமாக ஐந்து மாகாணங்கள் மட்டும் பங்குபற்ற உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி முரளியின் தலைமையில் மத்திய மாகாண அணியும், மகேலவின் தலைமையில், வட மத்திய மாகாண அணியும், மாவன் அத்தப்பத்து தலைமையில் தென்மாகாண அணியும், சமிந்த வாஸ் தலைமையில் ஊவா மாகாண அணியும், ஹசான் திலகரட்ண தலைமையில் மேல்மாகாண அணியும் பங்குகொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அச்சுற்றுப் போட்டிக்கான வீரர்கள்தெரிவு - இங்கிலாந்தின் கவுண்ரி அணித் தெரிவு வழமைபோல் நடைபெறும முறையில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதாவது ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் தேசியநிலை வீரர்கள் பன்னிரண்டுபேரும், மாகாண அணிகள் மட்டத்தில் பிரித்துக்கொள்ளப்படுவார். இவர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண அணியில், மூன்று வருடங்கள் விளையாடியாகவேண்டும். விடயங்கள், நடைமுறைச் சாத்தியமானவையாகவும், நிரம்பப் பிரயோசனம் உடையனவாகவும் இருக்கப்போகிறது என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அத்தோடு, இத்தகைய திட்டமிடல்கள் மிகவும் அவசியம்கூட. ஆனால், அஙகு வடக்கு கிழக்கு மாகாணம் பற்றி எதுவும் குறிப்பிடபபடவில்லை இது தொடர்பான முன்னணிகள், பின்னணிகள் பற்றியும் அறிந்துகொள்ள இயலவில்லை.

**ஜோசப் கிருஸ்ணா**

# சூறாவளி ஓய்வு கொள்கிறது

அவுஸ்திரேலிய அணியின் முதன்மை பந்துவீச்சாளர் என்றால்- இந்த நிமிடம் வரையில் கிளைன் மக்ராதான். அவர் இல்லாத நிலையில் முடிவடைந்த இந்தியாவிற்கு எதிரான தொடரில், இந்தியா நன்றாகவே செய்தது என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை. மக்ரா இருந்திருந்தால் இந்தியாவிற்கு நிலைமைகள் அவ்வளவு சொகுசாக இருந்திருக்காது என்பதும். ஏனெனில், இவரது பந்துவீச்சு, அவர்தம் முதன்மை நிலை, மற்றும் மைதானத்தில் நடந்துகொள்ளும் பாங்கு என்பன ஏனைய சக வீரர்களுக்கும் தவிர்க்க முடியாதபடி உயர்மன உறுதியைக் கொடுத்திருக்கும்.



கிளைன் மக்ரா தொலைப்பவர்

இப்பொழுது இவர் பற்றிய செய்திகள் மீளவும் அடிபடத் தொடங்கியுள்ளன. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் அதன் பின் இன்று வரையில் டெஸ்ட் ஆட முடியவில்லை. இந்த வகையில், சிம்பாப்வே இந்திய அணிகளுக்கு எதிராக மொத்தம் ஆறு டெஸ்ட் போட்டிகளை இழந்துள்ளார். அதேவேளை, உபாதைகளில் இருந்து சுகம் பெற்றுள்ள அவர், இந்த மாதம் 19 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவிருக்கும் உள்ளூர் போட்டிகளில் விளையாடத்தயாராகிவிட்டார். தற்போது இவரது இலக்கு அடுத்தமாதம் இலங்கை வரவிருக்கும் அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடிப்பதாகும்.

தன்னைப்பற்றி அவர் கூறும் கருத்துக்கள் அவரது நிதானத்துக்கு நல்ல உதாரணம். தற்போது நடைபெறும் முத்தரப்புப் போட்டிகளில் பங்குகொள்ள தன்னால் இயலுமெனினும் அதனை அவர் விரும்பவில்லை. நூறு வீதம் திருப்தியான உடற்சுகம் இருந்தால் மட்டுமே நான் விளையாடுவேன். அரைகுறையான நிலையில் விளையாடி மீண்டும் உபாதைகளுக்குள்ளாகி எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்ளத் தான் தயாராக இல்லை என்கிறார். மக்ராபோன்ற உயர் தகைமைப் பந்துவீச்சாளர்கள் நீண்டகாலம் கிரிக்கெட் உலகில் இருப்பதையே எல்லோரும் விரும்புவார்கள்.

**-காயத்ரி -**

## தெற்குத் திசையிலிருந்து... - இந்திரஜித்

# தென்பகுதி அரசியலில் வலுக்கும் நெருக்கடி தேர்தலை எதிர்கொள்ளத் தயங்கும் கட்சிகள்...





தேசநலனின்மை, அரசியல் சுயலாபம், இனவாதம் இவையாவும் - தென்னிலங்கை அரசியலின் பிரதான தோற்றங்களாகும். இந்தத் தோற்றங்கள் யாவும், இலங்கையை இன்று சர்வதேச மட்டத்தில் மிகவும் மோசமான அரசியல் நிலவும் நாடாகத் தோன்றச்செய்துள்ளது. இனப்பிரச்சினையின்போது, இந்த நாடு இனவாதிக்கம் கொண்ட நாடு என்பதற்கு, மாறிமாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட, தமது சொந்த ஆட்சி அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக கொண்டுவரப்பட்ட சட்டங்களை குறிப்பிடலாம். இதற்கு உதாரணத்திற்கு - முன்னர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டுவந்த நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி அரசியலமைப்பைக் கூறலாம்.

இனவாதம் எனும்போது, கடந்த காலத்தில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள கட்சியும் இனவாதத்தைத் தமது பிரசாரங்களாக முன்வைத்தமையை உணரமுடியும், ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாசா போன்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளும் இந்த இனவாத முறையையே கைக்கொண்டனர். அது அவர்களின் தேர்தல் வெற்றிக்கு உதவியது. எனினும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, இனவாதமற்ற கொள்கையை முன்வைத்தார் என்பது தெளிவு. இது இலங்கை மக்கள், இனவாதபோக்கைக் கொண்ட தலைவர்களை ஓரங்கட்டினர் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஆனால், இன்று அதே ஜனாதிபதி - இனவாத கொள்கைக்கு முன்னிலை வழங்கும் மக்கள் விடுதலை முன்னனியுடன் இணைந்து தேர்தல் ஒன்றில் வெற்றிபெற முயற்சித்துக் கொண்டிருக்கிறார் என குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த வாரம் தென்னிலங்கையில் பல. முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றன.

ஜனாதிபதி இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற தெற்காசிய ஒத்துழைப்பு பிராந்திய நாடுகளின் கூட்டத்தில் பங்குகொண்டு - இலங்கையில், தாமும் பிரதமரும் இனப்பிரச்சினைத் தீர்வில் இணைந்து செயற்படுவதாக கூறியிருந்தார். எனினும், அவர் நாடு திரும்புவதற்கு முன்னர் - பிரதமர் இதனை மறுக்கும் வகையில், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து, தமது அரசாங்கம் விலகிக்கொள்ளப்போவதாக அறிவித்தார். இது பிரதமரைப் பொறுத்தவரையில் அவருடைய அடுத்த கட்டத் தேர்தல் நகர்வுக்குப் போதிய பிரசாரத்தை கொண்டுவந்துள்ளது என்பது உண்மை.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதுமுதல், பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நிலவிவரும் அரசியல் முறுகல்நிலை தீர்க்கப்பட்டது என்ற கட்டம் இன்று ஏற்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு கட்டம் ஏற்படும் என இரண்டு தலைவர்களுக்குமே தெரியும். ஆனால், மக்களை திருப்தி கொள்ள வைக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக, இருவரும் பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்திவந்தனர். பேச்சுவார்த்தையின் முதற்கட்டத்தில் இரண்டு தரப்பினரும் ஜனாதிபதி பொறுப்பேற்ற பாதுகாப்பு அமைச்சு

விடயத்தில் இணக்கம் ஒன்றுக்கு வந்தனர். பிரான்ஸ் நாட்டு முறைப்படி பாதுகாப்பு அமைச்சு விடயத்தில் இருதரப்பினரும் பங்கேற்கும் செயற்பாடு குறித்து ஆரம்பத்தில் பேசப்பட்டது. இதில் இணக்கமும் எட்டப்படும் நிலை உருவானது.

ஆனால், பின்னர் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு தனது பொறுப்பில் இருந்து மீண்டும் பிரதம மந்திரியிடம் கையளிக்கப்படமாட்டாது எனக கூறியதைத் தொடர்ந்து, பிரச்சினை மேலும் இறுக்கமடைந்தது. நாட்டின் இனப்பிரச்னை தீர்வு நகர்வுகள் முடங்கிப் போயுள்ளநிலையில், மக்களால் வெவ்வேறு காலப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு தலைவர்களின் இணக்கமின்மையால் இலங்கைக்குக் கிடைக்கவேண்டிய நிதி உதவிகள் ஸ்தம்பித்துப் போயின. இன்னும் இந்த நிலமை தொடர்கிறது. சர்வதேச நாடுகள் இலங்கையின் நிலவரத்தை நன்கு உணர்ந்துள்ளபோதும், அவையும் தமக்கு வாய்ப்பு ஏற்படும் வகையில் இலங்கை நாட்டின் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தமது பக்க சார்பான ஆதரவை வழங்கி வருகின்றனர். குறிப்பாக அமெரிக்கா - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை வரவேற்கிறது. இந்தியா இதற்கு மாறாக நடந்து கொள்வதாகப் பேசப்படுகிறது. ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் தமது மத்தியஸ்த தன்மை கெட்டு விடக்கூடாது என்பதற்காக இரண்டு தரப்பினர்களையும் திருப்திப்படுத்தும் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்கின்றன.

இவ்வாறான ஒரு கொள்கை இலங்கையில் தற்சமயம் முறுகலைத் தோற்றுவித்துள்ள இரண்டு தரப்பையும் ஊக்குவித்து செயற்பட வைப்பதற்கே உதவியுள்ளது.

பிரதமர், போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிப் போவதாக பண்டுவஸ்நுவரயில் அறிவித்தபோது, அதன்தாக்கம் தென்னிலங்கையின் இனவாத கட்சிகள் உட்பட்ட கட்சிகளிடம் இருந்து உடனடியாகவே வெளியானது. இது போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகிக் கொண்டால் நாட்டில் ஏற்படப்போகும் விபரீதங்களை இந்தக் கட்சிகள் உணர்ந்துள்ளன என்பதை தெளிவாகக் காட்டுகிறது. ஆனால், தமது பிரசார அரசியல் மேடைகளில் மாத்திரம், ஏன் இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படவேண்டும் என குறிப்பிட்ட கட்சிகள் பிரசாரம் செய்தன என்பதை தென்னிலங்கை சிங்கள மக்கள் கேள்விக் கணையாகத் தொடுக்கின்றனர்.

குறிப்பாக மக்கள் விடுதலை முன்னனியும் சிஹல உறுமயவும், போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து பிரதமர் விலகிக்கொள்வதாக அறிவித்த செய்தியை உடனடியாகவே கண்டித்தன. பிரதமர் அவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கக்கூடாது என அந்தக் கட்சிகள் கோரின. மக்கள் விடுதலை முன்னனி மற்றும், சிஹல உறுமய என்பன இவ்வாறான கருத்துக்களைக் கூறுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. முன்னர் பாதுகாப்பு மற்றும் உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்கள் பிரதமர் தலைமையிலான அதிகாரத்தில் இருந்தபோது - அது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய என்பன மேற்



கொண்ட போராட்டங்களை தற்சமயம் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

பிரதமரின் வசம் பாதுகாப்பு அமைச்சு இருந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போராற்றலை வளர்த்துக் கொண்டுள்ளார்கள் என, இந்த கட்சிகள் குற்றம் சுமத்தின. எமது ஜனாதிபதி அந்த அமைச்சை பொறுப்பேற்கவேண்டும், குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றவேண்டும் என்றெல்லாம், இந்த இரண்டு கட்சியிகளும் வலியுறுத்தி வந்தன. அதன்படி ஜனாதிபதியும் மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுக்கொண்டார். ஆனால், அவர் பொறுப்பேற்றமை காரணமாக - எந்தவித மாறுதல்களும் ஏற்படவில்லை. அமைச்சர் ராஜித சேனாரட்ணவின் கூற்றின்படி, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் - குரங்குப்பாஞ்சான் முகாம் அகற்றப்படவில்லை அதற்குப் பதிலாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் பேரில், இராணுவ முகாங்கள் பல அகற்றப்பட்டுள்ளன. இந்த நிலையில் முன்னனர் வலியுறுத்தி வந்த கோரிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி தற்சமயம் ஜனாதிபதியிடம் கோரமுடியாது. அதே நேரம் ஜனாதிபதியின் செயற்பாடு காரணமாகவே போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகிக் கொண்டது. இதன் காரணமாகவே நாடு மீண்டும் யுத்த நிலைக்குச் சென்றுள்ளது என, மக்கள் நினைப்பார்களேயானால் அதன்போது, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய என்பன பற்றியும் மக்கள் மத்தியில் இருந்து விரோதமான கருத்துக்கள் வெளிவரக்கூடும்.

எனவேதான், இந்த இரண்டு கட்சிகளும் முந்திக்கொண்டு - ஏனைய கட்சிகளைப்போலவே பிரதமரின் அறிவிப்பிற்குக் கண்டனம் தெரிவித்து - 'நல்லபிள்ளை' வேடத்தைப் போட்டுக் கொண்டனர். இந்த சூழ்நிலையில் குறிப்பிட்ட இரண்டு கட்சிகளினதும் மற்றொரு நோக்கம் வெளிப்பட்டது.

இதில் மக்கள் விடுதலை முன்னணி தேர்தலுக்கு மட்டுமல்லாமல், அதிகாரப் பரவலாக்கலுக்கும் இணங்கியே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைப்பை செய்துகொள்ளப் போவதாக அண்மைக்காலமாக வெளியான தகவல்களும் அடிபட்டு போயுள்ளன. தாம் மாகாண சபைத் தேர்தலுக்கு அல்ல, பொதுத் தேர்



தல் ஒன்றுக்கு மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள இருப்பதாக இந்தக் கட்சி வெளிப்படையாகவே கூறியுள்ளமை இதற்கு உதாரணமாகும்.

சிஹல உறுமயவும் - மாகாண சபைகள் வலுவிலந்துள்ள அதிகார அமைப்புக்கள் என்றுகூறி நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என கோரியுள்ளது. தேச அபிமானிகள் எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் மக்கள் விடுதலை முன்னணி, தற்சமயம் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், அதற்குச் செலவாகும் நிதியை நாடு தாங்கமாட்டாது என்று கூறப்படுகின்றது. எனவே, தேர்தலைத் தவிர்த்து இணக்கமுள்ள கட்சிகளின் அரசியலை ஏற்று சமூகமும், பெரும்பாலான பொதுமக்களும் கூறும் கருத்துக்களுக்கு அவர்கள் ஏன் செவி சாய்க்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. நடைமுறை அரசியல் முறுகலுக்கு பொது தேர்தல்தான் தீர்வு என்றால், மக்கள் விடுதலை முன்னணி தேசபிமானிகள் அமைப்பை முன்கொண்டுசெல்வதில் அர்த்தமில்லை என்ற கருத்து பரவலாகப் பேசப்படுகிறது. தேசத்தின் பால் அந்த முன்னணி வைத்திருக்கும் பற்று பொதுத்தேர்தலில் முடிவுறுமானால் அந்தக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன போன்று சுயநல அரசியலின் ஒரு அங்கமே என்பது பலரினதும் கருத்தாகும்.

மக்கள் விடுதலை முன்னனி கூறுவது போல, பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு இதிலும் தற்போதைய ஆசன எண்ணிக்கை எல்லா கட்சிகளுக்கும் கிடைத்தால், அந்த வேளையில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலை என்னவாக இருக்கும் என்று தொடர்ந்தும் பலர் கேள்வி எழும்புகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் கருத்து இவ்வாறு இருக்கும் போது, ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன? என்பது நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சி அமைப்பாளர்கள் கூட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னனி தம்முடன் கூட்டமைப்பு ஒன்றை பொதுத தேர்தலுக்காகச் செய்துகொள்ள விருப்பம் தெரிவிக்குமானால், மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதியின் தரப்பு இணங்கியுள்ளது. இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சி நிலையையே எடுத்துக்காட்டுகிறது.

மறுபுறத்தில் போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகிப்போகும் தந்திரத்துடன் தேர்தல் ஒன்றைச் சந்திக்கவுள்ள ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமும் முழுமை நிலை பெற்றுள்ளதா? என்பது கேள்விக் குறியே. ☆

> **தாம் ஐக்கிய தேசிய அரசாங்கத்தின் சமாதான நகர்வின்போது காட்டிய எதிர்ப்புகள்மூலம், நாடாளுமன்றத்தில் மேலும் சில ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என மக்கள் விடுதலை முன்னணி எண்ணியது. தாமும் ஒரு ஆசனத்தையாவது நாடாளுமன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம் என சிஹல உறுமயவும் எண்ணம் கொண்டிருந்தது. பிரதமரின் அறிவிப்பால் இரண்டு கட்சிகளுமே தமது செல்வாக்கு அற்றுப்போய்விடுமோ? எனக் கவலை கொணடுள்ளன. எனவே, தமது பிரசாரசூடு ஆறிப்போகும் முன்னர் பொதுத தேர்தல் ஒன்றை நடத்த வேண்டுமென அவை கோருகின்றன.**

# நான் இறக்க நேர்ந்தால் தேர்தல் நடத்தமுடியாது போகும்!

## திஸநாயக்க தெரிவிப்பு

சுகவீனமுற்ற நிலையில் இருக்கும் எனக்கு ஓய்வு வழங்க உயர் நீதிமன்றமும் முன்வராத நிலையில், துரதிஷ்டவசமாக நான் இறக்க நேர்ந்தால் தேர்தல்களை நடத்த முடியாத நிலைமை ஏற்படும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸநாயக்க கூறியுள்ளார்.

தற்போது பதவியில் இருக்கும் தேர்தல் ஆணையாளர் நாயகம் இறக்க நேர்ந்தால் மீண்டும் ஒரு தேர்தல் ஆணையாளரையோ பதில் தேர்தல் ஆணையாளரையோ நியமிக்க 17 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் நிதி ஒதுக்கீடு வழங்கப் படவில்லை.

17 ஆவது அரசியலமைப்பு திருத தத்தின் 27 ஆவது சரத்தின்படி தேர்தல் ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும் வரை, தேர்தல் ஆணையாளர் தேர்தல் ஆணைக் குழுவின் அதிகாரத்திற்கு பொறுப்பாக இருப்பதனால், தனது இறப்பு நிகழ்ந்தால் தேர்தல்களை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சேவையிலிருந்து விலக தனக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க, எதிர்பாராத நேரத்தில் தனது இறப்பு நிகழ்ந்தால், ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்க, தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பதுதான் ஒரேவழி என்றும் கூறினார். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் தீரரத்னவை நியமிக்குமாறு அரசியலைமைப்புசபை கடந்த 10 மாதங்களுக்கு முன்னர் முன்வைத்த பிரேரணையை ஜனாதிபதி ஏற்காமல் இருப்பதனால், தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# டென்மார்க்கில் மரணமாகிய விமலேஸ்வரன் நாட்டுப்பற்றாளர்

## தேசிய தலைவர் அறிவிப்பு

விடுதலைப் புலிகளின் டென்மார்க் பணியகத்தில் 16 ஆண்டுகளாக பணியாற்றி வந்தவேளையில், கடந்த நான்காம் திகதி காலமான விமல் என அழைக்கப்பட்ட கணேசையா விமலேஸ்வரன் ஒரு நாட்டுப்பற்றாளர் என தமிழீழ தேசியத் தலைவர் அறிவித்துள்ளார்.

தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்து சென்றாலும், தேசத்துக்கான பணிகளை டென்மார்க் பணியத்தின் ஊடாக மேற்கொண்டு வந்த இவர், டென்மார்க்கில் மாலதி கலைக்கூடம் உருவாக்கப்பட முன்னின்று செயற்பட்டவர் ஆவார்.

அத்துடன், தாயகத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான நிதி சேகரிப்பிலும் இவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தார்.

இவரின் நினைவாக டென்மார்க் பணியகத்தின் சார்பில் அஞ்சலிக் கூட்டமொன்று இடம்பெறவுள்ளது.

மாநகராட்சி மன்றம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா*
*ஏதம் பலவும் தரும்.*

- திருக்குறள்.

## நமது நோக்கு

### அறியாமையின் பாற்பட்ட அரசியல் அதிகாரப் போட்டி!

சமாதான முயற்சிகள் குறித்த சிறிலங்கா இரட்டை ஆட்சியாளரிடையேயான கருத்து மோதல்கள் ஒரு முடிவின்றித் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

போர்நிறுத்த உன்பாட்டை, உரிய அதிகாரங்கள் இன்றித் தனது அரசால் தொடர்ந்து கடைப்பிடிப்பதென்பது இயலாத காரியம் எனவும், இந்தநிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பொறுப்புக்களைத் தன்னால் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், ரணில் தனது நலைப்பாட்டை பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளதுடன், விரைவில் போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து அரசு விலகிக் கொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளதையடுத்து உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலுமான இது தொடர்பான கருத்துக்கள் பல்வேறுபட்ட நோக்கில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களை சந்திரிகா தனவசம் எடுத்துக்கொண்டதையடுத்து ஆரம்பமான பிரதமர்-ஜனாதிபதிக்கிடையேயான அதிகார மோதல் சில வேளைகள் ஒரு அதிகாரப்பலப்பரீட்சை போலவும், பல வேளைகளில் ஒரு அரசியல் நாடகத்தின் தீர்மானிக்கப்பட்ட காட்சிகளின் சுவையான அரங்கேற்றம் போலவும் தென்படுகின்றன.

சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புகளுக்கு, இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஒரு முக்கிய கட்டத்தை அது எட்டியபோதே - அதாவது, விடுதலைப் புலிகளால் அதற்கான திட்டவரைபொன்று அரசிடம் கையளிக்கப்பட்டதையடுத்தே- இந்தச் சிக்கல்கள் உருவாகத் தொடங்கியது என்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

சிறிலங்காவில் ஆட்சி நடத்திய அரசுகள் எல்லாமே, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சினையை நிரந்தரமான பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகவே பேணிப்பாதுகாக்க விரும்பினர் என்பதும், அதற்கான உறுதியான - நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதில் அவர்களுக்கு எவ்விதமான பொறுப்புணர்வோ, அக்கறையோ, ஆர்வமோ இருந்தது கிடையாது என்பதற்கு ஏராளமான அனுபவ ஆதாரங்களைக் கூறமுடியும்.

தென்னிலங்கையின் பேரினவாத அரசியல்வாதிகளின் அரசியல் கொள்கைகள் யாவும் இனத்துவச் சிந்தனையின் அடிப்படையிலான குறுகிய கருத்தியல் கோட்பாடுகளையே தமக்கான சித்தாந்தங்களாக வரித்துக்கொண்டவை என்பதை அரசியல் உணர்ந்த அனைவரும் அறிவர்.

இனவாத சித்தாந்தவாதிகள் ஒருபோதுமே இனப்பிரச்சினைக்கு சமத்துவக் கொள்கைகளின் அடிப்படையில் தீர்வு காண, முயன்றதுமில்லை, விரும்பியதுமில்லை.

அவர்களைப் பொறுத்தவரை சமாதானம், அரசியற்தீர்வு என்ற வாசகங்கள் ஒவ்வாமைத்தன்மை கொண்டவையாகவே உணரப்பட்டுள்ளதும் உண்மையே. ஆனாலும், மேற்படி வார்த்தைகளை உதட்டளவில் உச்சரித்து தம்மை யோக்கியமான, ஜனநாயக தத்துவத்தில் நம்பிக்கைகொண்ட கனவான்களாகவும், சீமாட்டிகளாகவும் காட்டிக்கொள்வதில் அவர்கள் ஒருபோதும் பின்நின்றதுமில்லை.

அது சிறிலங்காவின் சிங்கள அரசியல் தலைமைகளின் பாரம்பரியமாகவே இருந்தும் வருகிறது.

ஆளும் கட்சி சமாதானம் என்றால், எதிர்க்கட்சி அதை எதிர்க்கும், குழப்பும். அதேபோன்று எதிர்க்கட்சி ஆட்சிக்கு மாறி சமாதானப் பேச்சுவார்த்தை என்றால், எதிர்க்கட்சிக்கு மாறிய ஆளும் கட்சி அதை நிராகரிக்கும்.

இது சிறுபான்மையோர் உரிமைகள் தொடர்பான விடயங்களில் சிங்கள தலைமைகள் கையாளும் ஒரு வஞ்சகத்தனமான உத்திமுறையேயாகும். தற்போதும் அதுதான் தொடர்கின்றது.

ஜனாதிபதி தரப்பும் பிரதமர் தரப்பும் ஆளுக்காள அரசியல் எறிகணை வீச்சை நடத்துவதன் மூலம் எதனைச் சாதிக்க விரும்புகிறார்கள் என்பது தெரியவில்லை. இருதரப்புமே தமக்கு சமாதானத்தை உருவாக்கத்தான் அதிகாரத்தை வழங்கியிருக்கிறார் என்பதை சுலபமாகவே மறந்துவிட்டு, தமக்குள்ள அதிகாரம் ஒருவரோடொருவர் அரசியல் யுத்தம் புரியவே என நினைத்துச் செயற்படுவதுதான் அறியாமையின் உச்சக் கட்டமாகும்.

சமாதான முயற்சியைத் தொடரும்படி பணிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்கிறார் பீரிஸ்.

அதிகாரமின்றி சமாதான முன்னெடுப்பை நகர்த்த முடியாதென்கிறார் ரணில். பிரதமர் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகுவது தன்னிச்சையான செயல் என்கிறார் மகிந்த ராஜபக்ஷ.

சமாதான முன்னெடுப்புக்கும் அமைச்சுப் பறிப்புக்கும் தொடர்பில்லை என்கிறார் ஜனாதிபதி.

போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகினால், பிரதமர் பதவியில் இருந்தும் விலக வேண்டும் ரணில் என்கிறார் விமல் வீரவன்ஸ.

இப்படி ஆளுக்கு ஆள் கூறும் கருத்துக்களில் ஏதும் அர்ததம் இருக்கிறதா என்பதை அவர்களிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ளமுடியும்.

இது தேசிய ரீதியில் ஒரு முக்கிய பிரச்சினை என்பதை மறந்து இதனை அயலகமோ, அனைத்துலகமோ, மேற்குலகமோ கொடுக்கும் அழுத்தம் மற்றும் அறிவுறுத்தல்களின்படி தான் கையாளவேண்டும் என நினைக்கும் சுயாதீன சிந்தனையற்ற அரசியற் தலைமைகளால் சிறிலங்காவில் சமாதானம் என்பது வெறுமனே தூரத்துப் பச்சையாகவே இருக்குமென அஞ்சத் தோன்றுகிறது.

அதிகாரப் போட்டி உண்மையில் தேசிய நலன் குறித்த விடயமல்ல என்பதை வரலாறு உணர்த்தியே தீரும்.

## நாடும் நடப்பும்




# செயலகத்திலுள்ள ஓய்வூதியக் கோவைகளை பிரதேச செயலகங்களுக்குமாற்ற நடவழக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இருந்த - ஓய்வூதிய மூலக் கோவைகளும், இணைக்கோவைகளும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை, மாவட்டச் செயலக அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர். தற்சமயம் ஓய்வூதியம் பெறுபவர்களது கோவைகள் ஏற்கனவே அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டமை தெரிந்ததே. இறந்தவர்கள், இடமாற்றம் பெற்றவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்று ஓய்வூதியத்தைப் பெறாதவர்கள் போன்றவர்களது கோவைகளே தற்சமயம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

மேற்படி கோவைகளைப் பிரதேச செயலக ரீதியாகத் தரம் பிரிக்கும் பணியினைச் செயலக அலுவலர்கள் - சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும், துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர். ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஆரம்பித்த காலம் முதல், இன்றுவரையான பல்லாயிரக்கணக்கான கோவைகள் செயலக ஓய்வூதிய பதிவேட்டறையில் இதுவரை பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தமை பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். ஏனைய மாவட்டச் செயலகங்களில் 5 வருடத்திற்கு மேற்பட்ட கோவைகள் அழிக்கப்படும் நிலையில், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மட்டும் பல்வேறு நெருக்கடிகள், இடப்பெயர்வுகளின் மத்தியிலும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அநேகமாக இந்தமாத இறுதிக்குள் - சகல கோவைகளும், அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பணி நிறைவடைந்து விடும் எனவும் , இந்தப் பணி நிறைவடைந்ததும், மாவட்டச் செயலகத்தில் ஓய்வூதியம் சம்பந்தமான சகல பணிகளும் முடிவுக்குக்கொண்டுவரப்படும் எனவும், ஓய்வூதியாகள் தமது தேவைகள் எதுவானாலும் தத்தமது பிரதேச செயலகங்களுடனேயே தொடர்புகொள்ளவேண்டும் எனவும், மாவட்டச்செயலக ஓய்வூதியப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (24)

## கச்சாய் - அல்லாரை கிராமத்தில் உற்பத்திக் கிராமம் அங்குரார்ப்பணம்!

கச்சாய் - அல்லாரை கிராமசேவகர் பிரிவினுள் "உற்பத்திக் கிராமம்" ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கு 10 லட்சம் ரூபாவை சிறுகைத்தொழில் அமைச்சு சிபார்சு செய்து வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தினுள் எல்லா வகையான உற்பத்திகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தின் வளத்தினைப் பயன்படுத்தி கிராமத்தினை அபிவிருத்தி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்மூலம் பெறப்பட்ட நிதியினை பயன்படுத்தி 2650 அடி நீளமான அல்லாரை கோமர்தோட்ட வீதியினை புனரமைப்பதற்கும், 15 துரவுகளுக்கான சங்களைகள், நாற்று மேடைகள் அமைத்தல், பண்ணை செய்கையினை மேற்கொள்வதற்கு தேவையான பம்பு, தெளிகருவி போன்றன கொள்வனவு செய்தல் போன்ற புனரமைப்பு பணிகள் இடம் பெற்று வருவதாகத் தெரியவருகிறது. (25)

### விஷ சாராயம் அருந்திய 9 பேர் உயிரிழப்பு

## விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவு !

(கொழும்பு)

காலி - பந்தேகம என்ற இடதுதில கடந்தவாரம் விஷ சாராயம் அருந்திய காரணத்தால் உயிரிழந்த ஒன்பது பேர் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்தி, அது தொடர்பான அறிக்கையை விரைவில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இதேவேளை விஷ சாராயத்தை விற்றவர் எனக்கருதப்படுகின்ற ஒருவரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த ஒன்பது பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவினை இழப்பீட்டுத் தொகையாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நேற்று முன்தினம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## இலவச சீருடை விநியோகம் 22 ஆம் திகதி முதல் ஆரம்பம்

2004 ஆம் ஆண்டிற்கான இலவசசீருடை விநியோகம் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் 2004 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பு மாணவர்களுக்கான சீருடை விநியோகம், ஏனைய வகுப்பு மாணவர்களுக்கான சீருடை விநியோகத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது.

மேலும், தரம் ஒன்றில் சேர்க்கப்படும் மாணவர்களது சீருடைக்கான உரிய படிவங்களைப் பூரணப்படுத்தி, தத்தமது பாடசாலை அதிபர்களின் சிபார்சுடன், தமது பிரிவுக் கிராம உத்தியோகத்தர்களிடம் கையளிக்குமாறு பாடசாலைக் கல்வி அமைச்சு சகல பெற்றோர்களையும் கேட்டுள்ளது. (122)

# காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் மீண்டும் இம்மாதம் 20 ஆம் திகதி கொழும்புக்கு!

### -ஜனாதிபதியைச் சந்திப்போம் என்கிறார் செயலாளர்-

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் ஜனாதிபதியைச் சந்திக்க இம்மாதம் 20 ஆம் திகதி மீண்டும் கொழும்பு செல்லவுள்ளார்கள் என சங்கத்தின செயலாளர் எஸ்.சற்குணம் தெரிவித்தார்.

கடந்த வருட இறுதியில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக கொழும்பு சென்ற இவர்கள், ஜனாதிபதியைச் சந்திக்க முடியாது நாடு திரும்பினர். இது குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

காணாமற்போன பிள்ளைகள் பற்றிய முழுவிபரத்தையும் தன்னிடம் சமர்ப்பிக்குமாறும், அதன்பின்னர் எம்மைச் சந்திப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதற்கமைவாகவே கடந்த மாதம் ஜனாதிபதியின் அலுவலகம் சென்று, 1996/97 காலப்பகுதிகளில் காணாமற்போனவர்கள் தொடர்பான முழு விபரங்களையும் வழங்கியிருந்தோம் எனினும் எம்மை அவர் சந்திக்க மறுத்துவிட்டார்.

இது குறித்து எமக்குப் பதிலளித்த ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்துடன் எம்மைச் சந்திக்க ஜனாதிபதி திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இதனடிப்படையிலேயே நாம் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் மீண்டும் கொழும்புக்கு செல்லவுள்ளோம்.

இம்முறை ஜனாதிபதி எம்மைச் சந்தித்து எமது பிரச்சினைக்கு நல்ல தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும் என எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (ப)

செய்திக் கட்டுரை - கி. கமலதாஸ்

# முதுமையை அரவணையுங்கள் - அது உங்களுக்குள்ளும் இருப்பதொன்றே..!



வாழ்க்கை என்ற புத்தகத்தின் கடைசி அத்தியாயங்களைத் தட்டிக்கொண்டிருப்பவர்களே முதியவர்கள் ஆவர். தனது குடும்பத்துக்காகவும், தனது சமுகத்துக்காகவும், தனது நாட்டுக்காகவும் தனது உடலைப் பணயம் வைத்து, அல்லும் பகலும் அயராது உழைத்து தனது குடும்பத்தையும், தனது சமுகத்தினையும் தனது தாய்நாட்டினையும் ஏணிப் படிகளில் ஏற்றிவைத்த உத்தமர்கள் இந்த முதியவர்கள்.

ஆனால், இன்றைக்கு நமது சமுதாயம் இந்த உயரிய தெய்வங்களை ஒரு முட்டுக் கட்டை போன்று உபத்திரவங்களாக எண்ணி, வீட்டு மூலைக்குள் முடக்குவதும், தனிமைப் படுத்தப்பட்ட குடிசைக்குள் தள்ளிவிடுவதும், வீட்டைவிட்டு வீதியோரங்களுக்குத் துரத்துவதும், முதியோர் இல்லங்களிடம் ஒப்படைப்பதும் ஒரு நாகரிகமாக வளர்ந்துவருவது கவலைக்குரிய விடயமாகும்.

இந்த முதியவர்களுக்குத் தனிமை என்பது ஒரு கொடிய நோயாகவே காணப்படுகின்றது. அவர்கள் தனிமையில் இருப்பதை விரும்புவதுமில்லை. கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்று, கூட்டுக் குடும்பத்தில் சேர்ந்து வாழ்வதையே இவர்கள் விரும்புகிறார்கள். தனது பிள்ளைகளின் சந்தோசங்களை, பேரக் குழந்தைகளின் செல்லக் குறும்புகளைக் கண்டு மகிழ்தல், கொஞ்சிக் குலாவுதல், விளையாடுதல், கதை சொல்லல் போன்ற எத்தனை எத்தனையோ ஆசைகளையும் உணர்வுகளையும் உள்ளத்தில் கொண்டவர்கள்தான் இந்த முதியவர்கள். அப்படிப்பட்ட இந்தப் பிறவிகளை பெற்ற பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், உறவுக்காரர்கள் போன்ற பல தரப்பட்ட வர்க்கத்தினரும் ஒதுக்கி ஓரவஞ்சனை செய்வது மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட செயலாகும்.

வாழ்க்கையின் கடைசிப் பயணத்தில் பயணித்துக்கொண்டிருக்கும் இந்த உறவுகளில் பெரும்பாலானவர்கள் நோய்வாய்ப்படுவது இயற்கை. அவர்கள் நோய்வாய்ப்படும்போது, அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகள், சுத்தம் சுகாதார வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளையும் அவர்களுக்குத் தேவையான நேரங்களில் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது, பெற்றெடுத்த பிள்ளைகளின் கடமை மட்டுமல்லாது கட்டாயமும் ஆகும். ஆனால் இன்றைக்கு நோய்வாய்ப்பட்டவுடனோ அல்லது படுக்கை நிலையில் வேதனைகளையும் துன்பங்களையும் சுமந்துகொண்டிருக்கின்ற போதிலோ, அவர்களது பிள்ளைகள் அவர்களைத் தூரத்திலோ, கிட்டவோ வந்துநின்று முளிந்து முளிந்து, திட்டித் திட்டி அவர்களுக்குப் பணிவிடை செய்வது - அவர்களுக்கு உயிரிருக்க ஊனம் வாங்குவது போன்ற செயலாகும். இப்படிப்பட்ட பணிவிடைகள் அவர்களுக்குத் தேவையும் இல்லை.

மேலும் நோய்வாய்ப்பட்ட அல்லது நோய்வாய்ப்படாத முதியவர்களோடு சேரவோ அல்லது அவர்களுடன் கதைப்பதற்கோ தமது பிள்ளைகளையும் உறவினர்களையும், நண்பர்களையும் அனுமதிக்காத வர்க்கத்தினரும் நடமாடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவ்வாறான கீழ்த்தரமான போக்குகளால் - சிறியவர்கள், பெரியவர்கள் உள்ளத்திலுள்ள பாசவலைகளை அறுப்பது மட்டுமல்லாது அன்பின் அகராதிகளைப் புரிந்துகொள்ளாது நாளைக்கு அவர்களும் முதுமைநிலை அடையும்போது- அவர்களின் முதுமை எதிர்காலமும் கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதை உணர்ந்துமுள்ளனர்.

இவ்வாறாக முதியவர்களின் உள்ளத்து உணர்வுகளும் ஆசைகளும் நிறைவேற்றப் படாத பட்சத்தில், இந்த முதியவர்களுக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு - கடவுளே! என்னை ஏன் படைத்தாய்? எதற்காகப் படைத்தாய்? இந்தநிலை எனக்கு வேண்டுமா? என்று கடவுளிடம் இரங்குவது மட்டுமல்லாது தாங்கள் உயிரோடு இருப்பதை விடுத்து மரணத்தைத் தழுவுவது மேன்மை என்றும் சில முதியவர்கள் கருதுவதற்கும் நமது சமூகம்தான் காரணமாகும்.

இன்னும் சில முதியவர்களது உள்ளத்து உணர்வுகள், ஆசைகள் அடக்கப்படுவது மட்டுமல்லாது அவர்களை உடலியல் ரீதியாக அடித்தல், தள்ளுதல், வெருட்டுதல், நேரத்திற்கு உணவு போன்றவற்றை வழங்காது விடுதல் போன்ற பல வழிகளிலும் இவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். இவ்வாறாக, நாளுக்கு நாள் துன்பங்களையும், கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு இருக்கும் இந்த முதியவர்கள் தற்கொலை முயற்சிமூலம், தமது உயிர்களை மாய்த்துக்கொள்வதற்கும் நமது சமூகம்தான் பதில்சொல்லவேண்டும்.

பெற்றெடுத்த பிள்ளைகளில் சிலர் முதுமை அடைந்திருக்கும் தாய், தகப்பனை வீட்டிலுள்ள பொருள் பண்டத்தின் காவற்பொருட்களாக நிறுத்திவிட்டு அவர்கள், வெளியிடங்களிலோ அல்லது வெளிநாட்டிலோ சொகுசு வாழ்க்கை நடத்திவருவதும் நமது சமூகத்தில் தினம்தினம் அதிகரித்துக்கொண்டுவரும் ஒரு செயல். சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவருபவர்களில் சிலர், அவர்களின் வீட்டின் காவற்காரர்களான தாய் தகப்பனுக்கு - பணம், உடை போன்ற சகல வசதிகளையும் செய்து, சமூகத்தில் வரவேற்பைப் பெறுகின்ற வர்க்கத்தினராக இருக்கின்றபோதிலும், சிலர் வெளியிடங்களுக்கு போனதும், தம்மைப் பெற்றவர்களோடு எந்தத் தொடர்புமின்றி ஏனோ, தானோ என்ற நிலையில் உள்ளவர்களாகவும் உள்ளனர்.

எது என்னவாக இருந்தாலும், இந்த முதியவர்கள் எதிர்பார்ப்பது - பணம், பண்டம் போன்ற உயரிய பொருட்களை அல்ல. அவர்கள் எதிர்பார்ப்பது அன்பு, கருணை, அரவணைப்பு, போன்ற உயரிய சிந்தனைகளைத்தான். அதற்காகஆவது வெளியிடங்களிலும், வெளிநாட்டிலும் வாழ்க்கையை நடத்திவருபவர்கள், சுடலையில் மரக்கட்டையில் கிடக்கும்போது கொள்ளிவைத்து எரியூட்டப்போனால் போதும் என்ற மூட எண்ணத்தை விடுத்து அவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மதிப்பளித்து நிறைவேற்றவேண்டியது நமது சமூகத்தின் கடமையாகும்.

இவ்வாறாக புறக்கணிப்புச் சீண்டுதல்களால் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த முதியவர்களின் நலன்களைப் பேணுவதற்காக அரசாங்கம் சங்கங்களை, சட்டங்களையும் இயற்றி அந்த உயரிய தெய்வங்களைப் பாதுகாத்து பராமரிக்க எத்தனித்துக்கொண்டிருக்கின்ற போதிலும், இந்த எத்தனிப்புக்களால், அவர்களது உள்ளத்து உணர்வுகளையும் ஆசைகளையும் நிறைவேற்றுவது என்பது சாத்தியமே இல்லை.

மொத்தத்தில் கொடுமை என்ற பெயரில் வதைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த முதியவர்களை அதிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமாயின், ஒவ்வொரு மனிதனும் சக மனிதன் நேசிக்கவேண்டும். அப்போதுதான் முதியவர்களும் இன்பக் கடலில் நீச்சலடிக்க முடியும்.

**"முதுமை என்பது ஒரு பொக்கிஷம் - அதை பேணிப் பாதுகாப்பது நமது கடமை"**

ஒரு கல்விக்களச் சுற்றுலா அனுபவக் கட்டுரை - நிறைவுப் பகுதி

# முஸ்லிம்களை வேறுபடுத்தி பார்க்க விடுதலைப் புலிகள் விரும்பவில்லை

*(நேற்றைய தொடர்ச்சி)*

யாழ் நகரின் பல முக்கியமான இடங்களைப் பார்வையிட்டதுடன், முன்னர் முஸ்லிம்கள் வாழ்ந்த கிராமங்களில் ஒன்றான - வேலணை மண்கும்பான் கிராமத்தைப் பார்வையிடச் சென்றபோது அங்கே மூன்று முஸ்லிம் குடும்பங்களைச் சந்திக்கக் கிடைத்தது.

நீண்டகால புகழ்மிக்க மண்கும்பான் வெள்ளைக் கடற்கரைப் பள்ளிவாசலைச் சுற்றி, 1990 ஆம் ஆண்டு சுமார் 60 குடும்பங்கள் சுற்றியிருந்த தமிழ் மக்களுடன் உறவுகொண்டு வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் எந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் இன்றி பள்ளிவாசல் விடுதியில் தங்கியுள்ளார்கள். அருகிலுள்ள கடலை நம்பிய வாழ்க்கை. 1990 இல் அவர்கள் இருந்த நிலைகுறித்த அவர்களின் ஏக்கத்தினை எங்களுடனான கலந்துரையாடலின்மூலம் அறிய முடிந்தது. இதுவரை அவர்களுக்கு எவ்வித இழப்பீட்டு நிவாரணமும் வழங்காத குறையையும் அவர்கள் எங்களிடம் முறையிட்டார்கள். அவர்களுடனான சிறிது நேர உறவாடல் மனநிறைவைத் தந்தது. அவர்களோடு சேர்ந்து கடலில் மீன்பிடித்த நிகழ்வுகள் மனதில் நிறைந்து நிற்கின்றன.

யாழ் நகருக்குத் திரும்பிய நாங்கள், யுத்தத்தால் அழிவுற்ற மேலும் பல இடங்களைப் பார்வையிட்டோம். ஒரு காலத்தில், இலங்கை இராணுவத்தினரின் முக்கிய தளமாகவிருந்த யாழ்ப்பாணக் கோட்டை - இடிந்து அழிந்த நிலையில், பற்றைகளால் நிறைந்திருக்கின்றது. ஆசியாவின் மிகப்பெரிய நூலகமாக வர்ணிக்கப்பட்ட - யாழ். பொதுநூலகம் அரச பயங்கரவாதத்தின் கோரவிளைவினால் காடையர்களால் எரிக்கப்பட்டது. இது தமிழ்மக்களின் கல்வியின் பெரும் சொத்தாகத் திகழ்ந்தது. கடந்த அரசாங்கம் எடுத்த முயற்சியினால் புனரமைப்புப் பணிகள் இன்று ஓரளவு நிறைவு பெறும் நிலையில் உள்ளன. அதனை சுற்றிப் பார்த்தபோது மனதில் ஒருவித துக்கமும், சந்தோசமும் கலந்திருந்தன. புகழ் பெற்ற யாழ். பொது விளையாட்டு மைதானம் இப்பொழுதுதான் மீளத்திருத்தியமைக்கப்படுகிறது.

அன்றிரவு 11.00 மணியளவில் காங்கேசன்துறை வீதியூடாக, யாழ் நகரை நோக்கி எவ்வித தடைகளும் அச்சமும் இன்றிப் பயணித்தபோது மனதில் நிறைந்திருந்த இன்பத்திற்கு அளவே இல்லை. கடந்த 2 வருடங்கள் வரை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத ஒரு சம்பவம் அது.

மறுநாள் காலை மன்னாருக்குச் செல்வதாக நிகழ்ச்சி நிரல் கூறியது. காலையில் யாழ் சந்தையில் - யாழ்ப்பாணத்து திராட்சைகளையும், வாழைப்பழங்களையும், பனம் பொருட்களையும் விரும்பியபடியெல்லாம் ஓடி ஓடி வாங்கியபோது அடைந்த சந்தோசத்தை சொல்லத் தேவையில்லை. யுத்தத்தால் அழிவுற்ற சந்தைக் கட்டடங்களில் மீண்டும் இப்பொழுதான் அவர்கள் தமது வியாபாரங்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

காலை 9.00 மணியளவில் யாழ் நகரை விட்டு இனமுரண்பாடு தந்த நினைவுகளுடன் மன்னாரை நோக்கிய பயணத்தைத் தொடங்கினோம். முகமாலைச் சோதனைச் சாவடிகளைக் கடநது தமிழீழப் பிரதேசம் ஊடாக பயணித்து ஓமந்தையில் வாகன ஆவணங்களைப்பெற்று வவுனியாவை வந்தடைய பகல் இரண்டு மணி ஆகிவிட்டது.

மன்னார் நகரை அடைந்தபோது - மீண்டும் யுத்தத்தின் விளைவுகள் எம்மை வரவேற்றன. முரண்பாட்டால் பாதிப்புக்குட்பட்ட பேசாலைக் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மீனவ மக்களுடன் மனம் திறந்து பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களும் இன முரண்பாட்டின் விளைவுகளை நன்கு அனுபவித்திருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் யுத்தத்தால் இடம் பெயர்ந்து அதிக கஸ்டங்களை அனுபவித்து அண்மையில்தான் சொந்த இடத்திற்குத் திரும்பியிருக்கிறார்கள். சில முஸ்லிம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து இந்தியாவில் பல வருடங்கள் அகதிகளாக வாழ்ந்துவிட்டு ஒரு வருடத்திற்கு முன்புதான் சொந்த ஊர் திரும்பியிருக்கிறார்கள். ஓலைக்குடிசைகளில்தான் தற்போது அவர்களின் வாழ்க்கை செல்கிறது. ஓடங்கள்தான் அவர்களின் சொத்துக்கள்.

பேசாலைக் கிராமத்திலிருந்து மீண்டும் மன்னார் நகரை வந்தடைந்து இன முரண்பாட்டின், அரச பயங்கரவாதத்தின் விளைவுகள் சிலவற்றைப் பார்வையிட்டோம். குறிப்பாக மன்னார் கோட்டை முழுவதையும் சுற்றிப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. தற்போது பொலிஸார் முகாம் அமைத்திருந்தபோதும் எமது கல்விச் சுற்றுலாவின் நோக்கத்தைத் தெரிவித்தபோது, பொலிஸ் தலைமை அதிகாரி அனுமதி தந்தார். சுமார் 10 - 15 அடி அகலமுள்ள கோட்டை மதில்களைச் சுற்றிப் பார்த்தபோது கோட்டையின் அமைப்பு, அதன் பலம் என்பனவற்றை அவதானிக்க முடிந்தது. அதுவும் யுத்தத்தில் சிக்குண்டு அழிவுற்றிருந்தது.

மறுநாள் காலை எங்களது பயணம் பல்கலைக்கழகத்தை நோக்கியதாக இருந்தது. வழியில் மடுமாதா கத்தோலிக்க தேவாலயத்தைப் பார்வையிட முடிவெடுத்துப் பயணித்தோம். யுத்த சூழ்நிலையில் ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு புகலிடம் கொடுத்த புண்ணிய பூமி என்பதால், எமது கல்விச் சுற்றுலாவின் நோக்கத்திற்குப் பொருத்தமான இடமாக அமைந்திருந்தது. அங்கு வசிக்கும் மக்களிடம் மனக்குறைகளைக் கேட்டறிந்தோம்.

எமது சுற்றுலாவின் நோக்கத்தைத் தெரிவித்தபோது தேவாலய நிர்வாக அதிகாரி அருட்தந்தை பிலிப் அவர்களுடனான சந்திப்புக்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்துதந்தனர். இன்முகத்துடன் வரவேற்ற தந்தை பிலிப், இன முரண்பாட்டின் விளைவுகளைப் பற்றியும் இன்றைய சூழலில் தீர்வு முயற்சிகளின் தன்மை பற்றியும் தனது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். வன்முறைகள் தேவையற்றது. நாங்கள் தனி மனிதர்கள் என்ற மனித உடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது மனிதம் என்ற புனிதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றார். பிரித்தானியர்கள் எம்மை அடிமைப்படுத்தியதையிட்டு இன்றும் வருந்துகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய தந்தை, நாம் ஒருவரை ஒருவர் நம்பாதவரை சமாதானம் ஏற்படாது என்ற கருத்தை வலியுறுத்தினார். நம்பிக்கையைக் கட்டியெழுப்பி எல்லா சமூகங்களும் ஒன்றிணைவதையும் அவர் வலியுறுத்தினார்.

யுத்தத்தால் தமிழ் மக்கள் அளவிலா துன்பங்களை அனுபவித்துவிட்டார்கள். ஆதலால் அவர்களின் தேவைகளை அரசு ஏற்கவேண்டும். இடைக்கால நிர்வாக சபையில் அவர்கள் வாழ்வதற்கான உரிமையைக் கேட்கிறார்கள். முதலில் அதைச் செய்யவேண்டும். அடுத்து பல அடிப்படைத் தேவைகளைக் கேட்கிறார்கள்.

எனவே, அவர்களின் தேவைகளையும் அரசு புரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் அரசியலமைப்பை மாற்றாமல் நாம் எந்தத் தீர்வையும் ஏற்படுத்திவிடமுடியாது. நமது முயற்சிகள் பல தோல்வியடைந்தமைக்கு நாம கடந்த காலங்களைப் பற்றிப் பேசுவதே காரணமாகும். எனவே எதிர்காலத்தைப் பற்றியே நாம் கவனத்தைச் செலுத்தவேண்டும் என்ற தந்தை பிலிப், முஸ்லிம்களின் நலன் குறித்த விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது நேர்மையுடன் நடந்துகொள்வதையிட்டு தனது சந்தோசத்தையும் வெளிப்படுத்தினார்.

யுத்த காலத்தில் சுமார் 35 000 அகதிகளைத் தாம் பராமரித்ததையும், யுத்தத்தின் கோர விளைவுகளில் அகப்பட்டு (விமானத் தாக்குதல்) சுமார் 35 அப்பாவிப் பொதுமக்களை இழந்துவிட்டதையுமிட்டு தந்தை பிலிப் கவலையுடன் தெரிவித்தார்.

இன்று பாதுகாக்கப்பட்ட பூமியாகத் திகழும் மடுமாதா தேவாலயப் பிரதேசம், எல்லா இன மக்களினதும் சமாதானத்திற்கான புகலிடமாக ஒரு காலத்தில் இருந்திருக்கிறது என்பதை எங்களால் அறியமுடிந்தது.

மனம் நிறைந்த இன்பங்களுடன் மடுமாதாவில் இருந்து பல்கலைக் கழகம் நோக்கிய பயணம் ஆரம்பித்தது. வழிநெடுகே மன்னார் பாதையில் பாரிய குளங்கள் யுத்தத்தின் விளைவினால் கவனிப்பாரற்றுக் கிடந்ததை அவதானிக்க முடிந்தது. மிகப்பெரிய குளங்களில் ஒன்றான கட்டுக்கரைக் குளத்தைப் பார்வையிட்டபோது மிகப்பரந்த குளம் தற்போது பற்றைக் காடுகளாலும் புற்தரைகளாலும் நிரம்பிக் கிடந்தது. ஒரு காலத்தில் மக்களின் பொருளாதாரத்தில் இந்தக் குளங்கள் பெரும் பங்கெடுத்தன. இவ்வாறாக ஒரு கல்விக் களச் சுற்றுலாவில் தமது நோக்கத்தை நூறு வீதம் நிறைவுசெய்துகொண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசறிவியல் பிரிவு விரிவுரையாளர்களும் மூன்றாம் வருட மாணவர்களும் உள்ளங்களை நிரப்பிய இனிய நினைவுகளோடு மாலை ஏழு மணியளவில் பல்கலைக் கழகத்தை வந்தடைந்தனர்.

**எம்.ஏ.ஜப்பார்** *(விரிவுரையாளர்)*
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.**

மாநகராட்சி
யாழ்ப்பாணம்.

# போர்க்கால குற்றவாளிகள் போலவே சதாம் ஹுசைனும் நடாத்தப்படுவார்!

## அமெரிக்க அதிகாரிகள் தெரிவிப்பு



ஈராக்கில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் தலைவர் சதாம்ஹுசைன் போர்க்காலத்துக் குற்றவாளியென கணிக்கப்பட்டு போர்க்காலத்து குற்றவாளிகள் அனுபவிக்கும் சலுகைகள் அவருக்கும் வழங்கப்படும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போர்க்காலத்து குற்றவாளிகளுக்கு ஜெனிவாவில் உருவாக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு அமையவே சதாமும் நடத்தப்படுவார் என பென்ரகன் அதிகாரி மைக்கல் சாவர் தெரிவித்தார்.

இதனிடையே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் சதாம்ஹுசைனின் தற்போதைய நிலைமைகளைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போர்க்காலத்துக் குற்றவாளிகளுக்கு நடத்தப்படுவது போன்று நீதிமன்றத்தில் சதாம் மீது வழக்கு நடத்தப்படவுள்ளது.

சதாம் மீது வைத்தியப்பரிசோதனைகள் நடாத்தப்படும்போது, எடுக்கப்பட்ட தொலைக்காட்சிப் படங்கள், பொதுமக்களின் எதிர்ப்புணர்வை மேலோங்கச் செய்துள்ளதாகவும் வத்திக்கானிலிருந்து வெளியிட்ட அறிக்கையில் சதாம் மாட்டைப்போன்று நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்கா, சதாம் மீதான பயத்தைப் போக்குவதற்காகவே தொலைக்காட்சிகளில் அவ்வாறு காண்பித்ததாக கருத்து வெளியிட்டிருந்தது.

மேலும், சதாம் கைதானபோது, காணப்பட்ட ஆவணங்களின் மூலம் அதிகளவிலான ஈராக்கியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# வடகொரியா சென்றுள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள் அணு ஆயுதம் தயாரித்த கட்டடத்தை பார்வையிட்டனர்

வடகொரியாவிற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள் ஜொங்பொஜோன்



என்ற பிரதேசத்தில், இரகசியமான முறையில் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்குப் பாவித்த கட்டடத் தொகுதியொன்றை, பார்வையிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதிநிதிகள் குழுவில், விஞ்ஞானிகளும், காங்கிரஸின் உதவியாளர்களும் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் அணுசக்தி அமைப்புக்கள் தொடர்பான பார்வையாளர்கள் வட கொரியாவிலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து, அமெரிக்காவிற்கும் வட கொரியாவுக்கும் இடையே முறுகல்நிலை தொடர்ந்து வந்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு முடிவொன்றைக் காண்பதற்கு அணுசக்தி அமைப்புக்கள் தொடர்பான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு வடகொரியா முன்வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸில் போராளிகள் தாக்குதல்; ஏழு படையினர் பலி!

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில்-மின் பிறப்பாக்கி நிலையமொன்றிற்கு காவலுக்கு நின்ற படையினர் மீது கம்யூனிஸ்ட் போராளிகள் நடத்திய தாக்குதலில் 7 படையினர்கொல்லப்பட்டதுடன், ஏழு பேர்வரை காயமடைந்துள்ளனர். அத்துடன் 3 போராளிகள் கொல்லப்பட்டனர். போராளிகள் தப்பியோடிய பாதையில் இரத்தக் கறைகள் தென்பட்டதாகவும், இதனால் பல போராளிகள் காயமடைந்திருக்கலாமெனவும் படையினர் தெரிவித்துள்ளார்கள்.

'புதிய மக்கள் படை' என அழைக்கப்படும் இப் போராளிக் குழுவினர் "மாவோ" அரசு ஒன்றை பிலிப்பைன்ஸில் உருவாக்குவதற்கென போராடிவருகின்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிடுகையில், இந்தத் தாக்குதல் சம்பவம் மின் பிறப்பாக்கி நிலையத்தைத் தகர்ப்பதற்காக நடத்தப்படவில்லையெனவும், படையினரின் சம்பவம் நடந்த பிரதேசத்தில் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களைக் கண்டிப்பதற்காகவே நடத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

600 வாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய நிலையத்தை 10 இற்கும் மேற்பட்ட படையினர் காவல்புரிந்து வந்த வேளையில், 50 இற்கும் மேற்பட்ட போராளிகளினால் இந்தத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அண்மைக் காலத்தில் உயர் அழுத்த மின்னை எடுத்துச்செல்லும் மின் கம்பங்களை இந்தப் போராளிக் குழுக்கள் தாக்கிவருவதாகவும் - பிலிபபைன்ஸ் இராணுவம் தெரிவித்துள்ள அதேவேளை, இந்தமக்கள் படையில் 9000 இற்கும் மேற்பட்ட போராளிகள் இணைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.




# ஆப்கானில் கைதுசெய்யப்பட்ட அமெரிக்கப் பிரஜை மீது விசாரணை நடத்த முடிவு

2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட யசீர் ஏசாம் கமீட் என்ற அமெரிக்கப் பிரஜைக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கு அமெரிக்க மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் போராளிகளுடன் கைதுசெய்யப்பட்ட இவர் கியூபா தீவான குவாஸ்டநோவில் தடுத்துவைக்கப்பட்டு இருந்தார்.

இவர் அமெரிக்கப் பிரஜை என்ற காரணத்தால் வேறு ஓர் இராணுவ சிறைக்கு மாற்றப்பட்டிருந்தார். இவர் ஒரு அமெரிக்கப் பிரஜை என்ற காரணத்தினால் தொடர்ந்து விசாரணைகள் இன்றி தடுத்துவைக்க சட்டம் இடம் அளிக்கவில்லை. தன்னை சட்டத்துக்கு மாறாக தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவித்து, உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இவரின் வழக்கை உயர் நீதிமன்றம் ஏப்ரல் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதென தீர்மானித்துள்ளது.



# சார்ஸ் நோய் அறிகுறிகளுடன் சீன உணவு விடுதி காவலாளி!



சீனாவின் குவாங்டோங் மாகாணத்தில் காவலாளி ஒருவருக்கு - சார்ஸ் நோயின் அறிகுறிகள் காணப்பட்டபின் அவ்விடுதியினை உலக சுகாதார ஸ்தாபனம் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தியிருந்தது.

முதலில் புனுகுப் பூனைகள் மூலமே அந்த நோய் பரவுவதாகக் கருதி பூனைகள் அழிப்பதற்கு குவாங்டோங் மாகாணத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

சென்ற கோடை காலத்தில் சார்ஸ் நோய்க் கிருமியின் தாக்கத்திற்குப் பின் மீண்டும் சீனாவில் சார்ஸ் நோயின் தாக்கத்துக்குட்பட்ட முதலாவது நோயாளி வைத்திய சிகிச்சையின் பின் கடந்த திங்கட்கிழமை வைத்திய சாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

மேலும், சார்ஸ் வைரஸ் கிருமிகள் தொற்றுதலுக்குள்ளான காவலாளியின் மரபணுக்களுக்கும் புனுகுப் பூனையின் மரபணுக்களுக்கிடையேயும் ஒற்றுமைகள் காணப்பட்டதனால், புனுகுப் பூனைகளைக் கொல்லவேண்டி ஏற்பட்டிருந்தது. காவலாளி கடமைபுரிந்த விடுதியில் புனுகுப் பூனை இறைச்சியில் உணவு தயாரிக்கப்பட்டுவந்ததாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பேச்சாளர் ரோய் வடியா ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்திருந்தார்.

இதனிடையே, பல ஆயிரத்துக்கும் அதிகமான புனுகுப் பூனைகள் நீரில் அமிழ்த்தியும் மின்சாரம் செலுத்தியும் கொல்லப்பட்டுள்ளன.

மேலும், சார்ஸ் நோய் சென்ற ஆண்டு முதலில் சீனாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டதும், இதனால் 800 இற்கும் அதிகமானவர்கள் மரணமடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஊர்சுற்றி எழுதுவது

கிழக்கில் மக்கள் நடமாடவே முடியாது. வடக்கிலும் கிழக்கிலும் ஆட்கள் கடத்தப்படுவதும் சிறுவர்கள் கடத்தப்படுவதும், வடக்கிலும் கிழக்கிலும் துப்பாககிச் சூட்டில் பலர் கொல்லப்படுவதும் அன்றாட நிகழ்வுகள் மாதிரி சில ஆங்கிலத் தினசரிகளும் செய்திகள் வெளியிட்டு வருவது பலரும் அறிந்ததே.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றும் வடக்கிலும் கிழக்கிலும் பயங்கரவாத செயல்கள் நடைபெற்று வருவதாக காட்டிக்கொள்வற்காக எங்கே ஒரு வாகனமோ, மாட்டுவண்டியோ காணாமற் போய்விட்டதென யாராவது சொன்னாலே புலிகள் வண்டியைக் கடத்தினார்கள் வாகனத்தைக் கடத்தினார்கள் என்று இந்தப் பத்திரிகைகள் செய்தி வெளியிடத் தயங்குவதில்லை.

கடத்தல், வாகனக்கடத்தல், சிறுவர் கடத்தல், துப்பாக்கிசூடு என இந்த ஆங்கிலத் தினசரிகளும் சிங்களத் தினசரிகளும் புலிகள் மீது குற்றம் சுமத்தி செய்தி வெளியிடத் தவறுவதில்லை.

தெகிவளை பொலிஸ் விடுதியில் சில மாதங்களுக்கு முன் ஒரு பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்டபோதும், பயங்கரவாதம் கொழும்புக்கு வந்துவிட்டதாக பத்திரிகைகள் எழுதின.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதத்தை கைவிடவில்லை என்றும், அவர்கள் நல்லவர்கள் மாதிரி வெளியுலகுக்கு காட்டிக் கொள்வதற்காக நடிக்கிறார்கள் என்றும் இந்தப் பத்திரிகைகள் எழுதத் தவறுவதில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்திற்குள்ளேயே பாதாள உலகக்கோஷ்டித் தலைவன் ஒருவன் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறான்.

முன்பு பாதாள உலகக் கோஷ்டித் தலைவனாக இருந்த சஞ்சீவ் என்பவனின் சகோதரன் தான் நீதிமன்றத்தின் உள்ளேயே பட்டப்பகலில் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்திருக்கிறான்.

சஞ்சீவ் கொலைசெய்யப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாகவே ரூபன் அமரசிங்க என்ற தம்மிக்க என்பவன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான். சுட்டவன் யார் தெரியுமா?

தேசத்தைப் பாதுகாக்க தேசாபிமானத்துடன் பட்டாளத்தில் சேர்ந்தவர்களில் ஒருவன். பட்டாளத்தில் இருந்து தப்பிவந்தவன் தான் இப்பொழுது நீதிமன்றத்திற்குள்ளேயே கொலை செய்திருக்கிறான்.

பயங்கரவாதம் எங்கே இருக்கிறது. பயங்கரவாதிகள் எங்கே இருக்கிறார்கள் தெரிகிறதா?

சார்க் மாநாட்டுக்கு பாகிஸ்தான் சென்ற சந்திரிகா அம்மையார் அங்கே ஆடைகள், நகைகள் வாங்கியதாக செய்தி வெளிவந்தது அல்லவா? நானும் இது பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

வெளிநாட்டுக்கு போனால் நினைவாக அந்த நாட்டிலிருந்து ஏதாவது வாங்கிச் செல்லவேண்டும் என்ற ஆசை யாரைத் தான் விட்டுது.

இஸ்லாமபாத்தில் தமக்கு இரண்டு புதிய ஷர்வாணி தைக்கவேண்டும் என்று இந்திய பிரதமர் வாஜ்பாய் ஆசைப்பட்டார். தமது பாகிஸ்தான் பயணத்தின் போது உதவியாளராக இருந்த அமைச்சரிடம் தமது ஆசையைச் சொன்னார். பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் அணிவது மாதிரி ஷர்வாணி தைக்க விரும்பினார்.

முஷாரப்புக்கு உடைதைத்த தையற்காரர் உடனடியாகவே கராச்சியிலிருந்து விமானத்தில் இஸ்லாமபாத்துக்கு வரவழைக்கப்பட்டார். வாஜ்பாயை அளவெடுத்து ஷர்வாணி தைக்கப்பட்டது.

வாஜ்பாய் சரியான கிண்டல்காரர் எந்தநேரமும் தமாஷ்செய்து கொண்டிருப்பார். தமது கவிதைப்புத்தகத்தில் கையொப்பமிட்டு எனக்கு தந்திருக்கிறார் என்று தையற்காரர் வாஜ்பாயை புளுகித் தள்ளியிருக்கிறார்.

வெளிநாட்டுப் பயணமென்றால் சும்மாவா.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

## அரசியல் சூழ்நிலை குறித்து ஆராய

# சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திரிகா இந்த வாரம் சந்திப்பார்!

(கொழும்பு)

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது பற்றியும் கலந்துரையாடுவதற்காக, சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திரிகா இந்த வாரம் சந்திக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

இந்தக் கலந்துரையாடலில் ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சி அமைக்கவுள்ள கூட்டணி தொடர்பாகவும், தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சி கூட்டணி அமைப்பது குறித்து ஜனாதிபதி இறுதிமுடிவை எடுப்பார் எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - ஜே.வி.பியுடனான கூட்டணிக்கு சுதந்திரக்கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது.

## நாடளாவிய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து

# யாழ்.மாவட்ட தனியார் பஸ்களும் 13 ஆம் திகதி முதல் வேலைநிறுத்தம்

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் நாளைமறுதினம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக சங்கம் அறிவித துள்ளது.

அகில இலங்கை பஸ் உரிமையாளர் சங்கம் நாடளாவிய ரீதியில் நடத்தத் திட்டமிட்டுள்ள போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே யாழ். தனியார் பஸ் உரிமையாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் வற்வரி முறையை நீக்குவது தொடர்பாக சாதகமான பதிலை அரசு தெரிவிக்காவிட்டால் தாம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்தார்.

## பொலிஸாரால் சிப்பாய் கைது

(கொழும்பு)

கிருந்துவெலப் பகுதியில் குற்றச் செயலில் ஈடுபட்டதாக தெரிவித்து சிப்பாய் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சிப்பாய் குண்டுவெடிப்பு ஒன்றில் பாதிக்கப்பட்டவர். இவரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கிருந்துவெலப் பகுதியில் இருந்து பல்வேறு குற்றச்செயல்களில் இவர் ஈடுபட்டு இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்

இராணுவத்தில் இருந்த காரணத்தைப் பயன்படுத்தி பல்வேறு அச்சுறுத்தல்களிலும் இவர் ஈடுபட்டுள்ளார். தன்னிடம் இருந்த கைக்குண்டையும் இவர் அச்சுறுத்தல் செய்வதற்குப் பயன்படுத்தியுள்ளார்.

பொதுமகன் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே மேற்படி இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.(01)

# முஸ்லிம் தேச பிரகடனம் முதலாம் ஆண்டு நிறைவு

(கொழும்பு)

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினரால் கடந்த வருடம் பிரகடனப்படுத்தப்பட்ட முஸ்லிம் தேச பிரகடன முதலாமாண்டு நிறைவுதினம் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாக முன்றலில் இந்த நிகழ்வு மாணவ சமூகத்தினரால் நடத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையான முஸ்லிம்கள் கலந்துகொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் - கட்சி பேதங்களையும், முரண்பாடுகளையும் களைந்து முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கச் சகல முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென அறைகூவல் விடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை எதிர்வரும் 21ஆம் திகதி மட்டக்களப்பில் பொங்குதமிழ் நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (07)

## சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம்

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் : 05.02.2004 - வியாழக்கிழமை
நேரம் : காலை 10.30 மணி (புதிய நேரம்)
இடம் : யாழ்.மத்திய கல்லூரி.

பிரேரணைகள் இருப்பின் அங்கத்தவர்கள் அவற்றை முறையாக 16.01.2004ம் திகதிக்கு முன்னர் பொதுச்செயலாளரை சேரும் வண்ணம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அங்கத்தவர்களின் முகவரிகளில் மாற்றம் இருப்பின் 16.01.2004க்கு முன் பொதுச்செயலாளருக்கு அறியத்தரவும்.

இவ்வறிவித்தலை ஏற்று, சகல கழக அங்கத்தவர்களையும் கூட்டத்திற்கு சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச்செயலாளர்,
சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம்,
233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(586)

## நாற்சந்தி




"என்ன மணியம்... எந்த சுவரொட்டியைப் பார்த்து யோசித்துக கொண்டிருக்கிறாய்...?"

"சந்திரிகாவும் - ரணிலுமா சமாதானத்தைப் படுத்திற பாட்டை நினைச்சுப்பாத்தம்... கனகு... கவலையா இருக்கு..."

"உது உனக்கு மட்டுமே கவலை... இது சர்வதேசக் கவலை மணியம்... அம்மாவுக்கும், ஐயாவுக்கும்தான் இது முஸ்பாத்தியான விடயமாயிருக்கு..."

"பாவம் இலங்கை...!"




## புலிகள் - முஸ்லிம்...

வுள்ளது.

அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், விடுதலைப் புலிகள் தரப்பில்-மட்டு. -அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கிரிசன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோரும்,

முஸ்லிம்கள் தரப்பில் - ஐ.எம். இப்ராகிம் உட்பட பலர் கலந்துகொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் புரிந்துணர்வை மேலும் கட்டியெழுப்புதல், மற்றும் இனவன்முறைகள் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (07)

## சமாதான...

செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையால் கிடைக்க வேண்டிய நிதியுதவியும் கிடைக்காமல் போகும் சாத்தியம் உள்ளது.

இதனால் எமது வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நடைமுறைப் படுத்த இருந்த பல செயற்பாடுகள் அமுல்படுத்தமுடியாமல் போகலாம்.

இதேவேளை கடந்த மாதம் ஐந்தாம் திகதி அமெரிக்காவின் வொஷிங்ரன் நகரில் நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடும் காலவரையறையின்றி ஒத்திவைக்கபடவுள்ளதாக பீரிஸ் தெரிவித்தார்.

## போர்நிறுத்த....

அரசிடம் இருந்து ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றதையடுத்து - சமாதான முயற்சிகளை ஜனாதிபதியே தொடரட்டும் என்றும், போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து தாம் விலகிக் கொள்ளப்போவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு குறித்து கருத்து வெளியிட்டபோதே போர்நிறுத்தக் கண்காணிப்புகுழு இவ்வாறு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாண...

மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை - சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பதென்றால், ஜனாதிபதி சந்திரிகா - மாகாண சபைத் தேர்தலுக்கு முன் பொதுத்தேர்தலை நடத்தவேண்டுமென ஜே.வி.பி. கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இனந்தெரியாதோரின்...

பிரேத பரிசோதனை மற்றும் மேலதிக விசாரணைகளுக்காக சடலம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது.

நேற்றிரவு வரையில் உயிரிழந்த இளைஞர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழாராய்ச்சி...

மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நல்லூர்க்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த மக்களை நினைவு கூர்ந்து மலர்மாலையினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், அருட்திரு சகாயதாஸ் அடிகளார், ஈ.பி.ஆர்.எல். எப் சுரேஸ் அணியைச் சேர்ந்த ரமேஸ் ஆகியோர் அணிவித்தனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், ரெலோ அமைப்பைச் சேர்ந்த ஸ்ரீகாந்தா உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

## இலங்கைத்...

இவர்களை அந்தப் பகுதிக்குச் சென்ற ஒரு படகுக்காரர் மீட்டு தனது படகின் மூலம் இராமேஸ்வரம் கரைக்கு கொண்டுசென்றார்.

தகவல் அறிந்து தனுஷ்கோடி பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர்.

தனது மகள் லாரன்ஸியாவுக்கு தொண்டையில் கட்டி உள்ளதாகவும், அவர் பேசமுடியாமல் சிரமப்படுவதாகவும் அதற்குச் சிகிச்சை பெறவே இந்தியாவுக்கு வந்ததாகவும் பொலிஸாரிடம் செபஸ்ரியன் தெரிவித்தார்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.